# சர்வதேசப்பிரச்னைகளுடன் தமிழ்ஈழ தீர்மானம்:


பக்கங்கள் 8. விலை சதம் 40

ஈழநாடு
The EELA NADU

மலர் 19 சித்திரை 9 ஐ: அல்: 1 இதழ் 69
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 21-4-77



தென்றலாகவீசி, புயலாகமாறி சூறாவளியாக சுழன்றுட—
1-5-77 மேதினம் முதல் மீண்டும்வெளிவருகிறது
'ஒரு தீப்பொறி'
(ஆசிரியர்: ம. க. அ. அந்தனிசில்)
மாதமிருமுறை-
விலைசதம்: 60


## கூட்டணி-கம்யூனிஸ்ட் மேதினக் கூட்டத்தில்!

யாழ்ப்பாணம், வியாழன்

இந்துமகாசமுத்திரப் பிரதேசத்தை அமைதிப் பகுதியாகப் பிரகடனப்படுத்தவேண்டும், டியாகோ கார்சியாவிலிருந்து வல்லரசுகள் வெளியேறவேண்டும் ஆசியா, ஆபிரிக்கா, தென்அமெரிக்கா ஆகிய பிரதேசங்களில் விடுதலைக்காகப் போராடும் இயக்கங்களுக்கு ஆதரவளிப்பது முதலிய சர்வதேசப் பிரச்னைகளுடன் சுய நிர்ணய உரிமையுள்ள தமிழ் ஈழக் கோரிக்கையையும் வலியுறுத்தும் தீர்மானம் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழர் கூட்டணி, கம்யூனிஸ்ட் கட்சிஇணைப்பு மே தினக் கூட்டத்தில் நிறைவேற்றப்படவிருக்கிறது.

தமிழர் கூட்டணிப் பிரமுகர்களும் திரு. வி. பொன்னம்பலமும் கலந்தாலோசனைசெய்து தயாரிக்கப்பட்டுள்ளஇந்த நகல் தீர்மானத்தைக் கூட்டணி இம்மாதம் 23-ம் திகதி கூடி ஆராய்ந்து முடிவு எடுக்கவுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

# கட்சிகள் தனியானலும் தேர்தலில் ஒரேசின்னம்

## தமிழர் கூட்டணி விளக்கம்

யாழ்ப்பாணம், வியா

தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள்தமது தனித்துவத்தை பேணிக் கொள்ளும் அதே சமயம் பொதுத் தேர்தலில் விடுதலைக் கூட்டணியின் ஒரே சின்னத்தின் கீழும் கொடியின் கீழுமே போட்டியிடும்.

தமிழர் சுயாட்சிக்கழகத்துக்கும் விடுதலைக் கூட்டணிக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது மேற்கண்டவாறு விளக்கம் கொடுக்கப்பட்டது.

இச் சமயத்தில்தான் சுயாட்சிக் கழகத்தை கூட்டணியில் இணைத்துக் கொள்வதானுல் அதை அழித்துக் கொள்ள நேரிடுமென்றும் எனவே அப்படியொரு நிலை ஏற்பட்டால் பேரவைப் பிரதிநிதித்துவம் இரண்டு வேண்டுமென்று சுயாட்சிக் கழகம் கேட்டது.

சுமார் முக்கால் மணி நேரத்தில் கூட்டணி சுயாட்சிக் கழகப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தன.

இதுபற்றி நடவடிக்கைக்குழு ஆராய்ந்து பின்னர் கழகத்துக்குத் தெரிவிப்பதாகக்கூட்டணியினர் தெரிவித்தனர்

தேர்தலில் கழகம் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுப் பூர்த்தியாகும் நிலையிலிருப்பதாகவும்சுயாட்சிக்கழகத்தினர் தெரிவித்தனர்.

### இணைப்பு ஏற்படுமா?

தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் நியமனக்குழு இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் கொழும்பில் தமிழர்கூட்டணி தலைவர்களில் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரத்தின் இல்லத்தில் கூடி வேட்பாளர் பற்றி இறுதித் தீர்மானம் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிகிறது. கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று கொழும்பு [illegible] ணர்.

இப்போதுள்ள நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் சுயாட்சிக் கழகத்துக்குமிடையில் உடன்பாடோ, இணைப்போ ஏற்படுவதுபெரும்பாலும் சாத்தியமாகாதென்றே கருதப்படுகிறது.

## மூதறிஞர் உடல்நிலை

யாழ்ப்பாணம், வியா

மூதறிஞர் செல்வநாயகத்தின் உடல்நிலையில் குறிப்பிடத்தக்களவு அபிவிருத்தி எதுவும் ஏற்படவில்லை.

[illegible] களில் சற்று முன்னேற்றம் காணப்படுகிறது.

எவரும் அண்மித்து நின்று கூப்பிட்டால் அதனை விளங்கிக் கொள்ளும் சக்தி அவருக்குப் படிப்படியாக அதிகரித்துவருகிறது என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றுத்தெரிவித்தன.

சிரிப்புச் சொட்டு



ஒருவர்: தேர்தல் அறிவிப்பு வெளியாகிவிட்டது...... உங்க தொகுதி நிலை எப்படியிருக்கு?

மற்றவர்: வாக்காளர் தொகையிலும் வேட்பாளர் தொகை கூடி விட்டது.

-சுந்தர்-

# இணைப்பு மேதினம் பற்றி கம்யூ.சம்மேளனம் கடிதம்

யாழ்ப்பாணம், வியா.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஆதரவிலுள்ள தமிழ்த் தொழிலாளர் தொழிற் சங்க சம்மேளனத்துடன் சேர்ந்து இம்முறை யாழ்ப்பாணத்தில் மே தினம் கொண்டாடுவதற்கு விருப்பம் தெரிவித்து மாஸ்கோ சார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் எழுதிய "கடிதம் தமிழ்த் தொழிற்சங்க சம்மேளனத்துக்கு நேற்றுக் கிடைத்தது.

தலைவர் திரு. அ. வைத்திலிங்கமும் செயலாளர் திரு. வி. நடராசாவும் கைச்சாத்திட்டு அனுப்பியுள்ள இக்கடிதத்தில் மே தினக்கொண்டாட்டத்தை இணைந்து நடத்துவது சம்பந்தமாகப் பேசுவதற்கு சம்மேளனத்தின் வட பிரதேசக்கிளை உபகுழுவொன்றை நியமித்துள்ளதென்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அடிப்படைபற்றி வி. பியுடன் பேச்சு

கம்யூனிஸ்ட்கட்சி ஆதரவிலான தொழிற்சங்க சம்மேளனமும் தமிழர் கூட்டணி ஆதரவிலான தமிழ்த் தொழிற் சங்க சம்மேளனமும் இணைந்து மேதின ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தும்பட்சத்தில்

(7-ம் பக்கம் பார்க்க)

## மருந்தாளருக்கு எச்சரிக்கை

கொழும்பு, புதன்

மருத்துவ உதவியாளர்கள் சட்டப்படி வேலை இயக்கத்தை உடனடியாக கைவிடாதபட்சத்தில் நோயாளர்களின் வசதியீனத்தை நீக்கும்பொருட்டு சுகாதார அத்தியட்சகர்கள் மூலம் மருத்துவநிலையங்களுக்கு மருந்துக்ளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு எச்சரிக்கை செய்துள்ளது.

சம்பள முரண்பாட்டுக் குழு

(8-ம் பக்கம் பார்க்க)

## மே மாதம் முதல் 2 கொத்து அரிசி!

கொழும்பு, புதன்

மேமாதம் 2-ம் திகதி முதல் பங்கீட்டுக்கு 2 கொத்து அரிசி கிடைக்கும். அரசாங்கம் இத்தீர்மானத்தை இன்று எடுத்தது.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியும், மகாவலி அபிவிருத்தி திட்டப்பகுதி அரிசியும் போதியளவு கையிருப்பில் இருப்பதால் பங்கீட்டரிசியை கூட்டிக் கொடுப்பது சாத்தியமாகிறது என்று அரசின் அறிக்கை கூறுகிறது.

ஏப்ரல் மாதம் 25ம் திகதிய வாரத்துக்குரிய பங்கீட்டு அரிசியை விநியோகஸ்தர்கள் எடுத்துச் சென்றுவிட்டதால் மே மாதம் 2ம் திகதிய வாரத்திலிருந்து அரிசியின் தொகையை அதிகரிக்க முடிவு செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அதாவது நாடு பூராவும் பங்கீட்டுக்கு தலா 2 கொத்து அரிசி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

(ஆ)

# தி. மு. க.-காங்கிரஸ் உறுப்பினர்கள் ராஜினமா

## நெடுஞ்செழியன் திட்டத்தில் மாற்றமில்லை

சென்னை, ஏப்ரல் 20

தி. மு. க.விலிருந்தும், காங்கிரஸ் கட்சியிலிருந்தும் 15 பேர் ராஜினமாச் செய்துவிட்டு ஜனநாயக காங்கிரஸில் சேர்ந்து கொண்டுள்ளதாக தமிழ்நாடு ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு. ஜெயராம் கூறியிருக்கிறார்.

காங்கிரஸ் பிரதேச காரியக் கமிட்டி உறுப்பினர்கள், தி. மு. க மாவட்டச் செயலாளர் இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆகியோர் ராஜினமாச் செய்துவிட்டு கட்சிமாறியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது இப்படியிருக்க தி. மு. க. விலிருந்து ராஜினமாச் செய்துள்ள பொதுச் செயலாளர் திரு. இரா. நெடுஞ்செழியன் தமது வெளியேறல் முடிவு மாற்றமுடியாதது என்று அறிக்கை ஒன்றின் மூலம் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். அத்துடன் தி. மு. க. விலிருந்து வெளியேறியுள்ள அனைவரும் வருகிற சனிக்கிழமை ஒன்று கூடி புதிய கட்சி அமைப்பது பற்றி தீர்மானிக்கவுள்ளதாகவும், பெரும்பாலும் புதியகட்சி உதயம் பற்றி சனிக்கிழமை அறிவிக்கப்படும் என்றும் நெடுஞ்செழியன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. நெடுஞ்செழியனின் அறிக்கையை, தி. மு. க. அமைச்சரவையின் சகாவான் ராஜாராம் இன்று வெளியிட்டார்.

(ஆ)

# வரி விளம்பரம்

## தேவை

யாழ். நகரில் உள்ள ஒரு பிரபல ஸ்ரூடியோவிற்கு ஒரு பெண் காசாளர் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவரும், ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சியும் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5966, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 5966

தோட்டத்தில் தங்கியிருந்து வேலை செய்ய தென்னந் தோட்ட வேலை அனுபவம் உள்ள மூன்று குடும்பங்கள் தேவை. தொடர்புகொள்ளவும்: சி. நா. நடராஜா, தட்டுவன் கொட்டி தோட்டம், பளை. 5952

சீமேன்ட் வெற்று பாக்குகள் தேவை. 23-4-77 சனிக்கிழமையும்; 30-4-77 சனிக்கிழமையும்மட்டும் வேலைநேரத்தில் கொண்டுவரவும். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 5961

## விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியில் 6 பரப்புக் காணி புதிய பெரிய வீட்டுக் கட்டடத்துடன் விற்பனைக்குண்டு. கிணறு, மின்சாரவசதியுண்டு. நேரிலோ கடித மூலமோ தொடர்புகொள்ளவும். — நா. செல்வரட்ணம், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 5954

## கல்வி

G. C. E. O. L. விஞ்ஞானம், வர்த்தகம், கலைவகுப்புக்கள் 19-4-77 காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். A.L. விஞ்ஞான வகுப்புக்களும் I. C. M. A. வகுப்புக்களும் 23-4-77 மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும். I. C. M. A. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் நடைபெறும். A.L விஞ்ஞானவகுப்புக்கள் கிழமை நாட்களில் 4 மணிக்குப் பின்னர் நடைபெறும். சுருக்கெழுத்து, தட்டச்சு, சிங்களம், ஆங்கில வகுப்புக்களும் 19-4-77ல் ஆரம்பமாகும். யாழ்ப்பாணக் கல்விநிலையம், 22, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (சாந்தி படமாளிகைக்கு முன்னால் உள்ளது.) 5951

## பயிற்சி

வெல்டிங், வயறிங், றேடியோ மேல்நாட்டு முறையில் காலை பிற்பகல், மாலைநேரப் பயிற்சிகள் NIET, 128, பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணம். 5931

---

**விற்பனையாகின்றன:**

1977-ம் ஆண்டுக்கான புதிய ஞானசுரபி வெளியீடு

## புலமைப்பரிசிற் பரீட்சை பயிற்சிகள்

5-ம் வகுப்பு

கடந்தகாலங்களில் பல்லாயிரக்கணக்கானமாணவர்கள் படித்துப் பயன் அடைந்தார்கள்.

| | | |
|---|---|---|
| பொது உளச்சார்பு: | விலை ரூபா | 5-00 |
| கணிதப் பயிற்சி: | ,, ,, | 3-00 |
| தமிழ்மொழிப் பயிற்சி; | ,, ,, | 3-00 |

ஞானசுரபி வெளியீடு எனக் கேட்டு வாங்குங்கள்.

வெளியீடு:

**ஞானசுரபி புத்தகக் கம்பனி**

217, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

5956

---

# மரண அறிவித்தல்

## மதலேனு அல்பேட் (இராசம்)

திருமதி மதலேனு அல்பேட் (இளைப்பாறிய ஆசிரியை திருக்குடும்ப கன்னியர்மடம் யாழ்ப்பாணம்) காலமாகிவிட்டார். இவர் செல்வராணி - அ. ப. அல்பேட் (மக்கள்வங்கி, பிரதானவீதி யாழ்ப்பாணம்) சுகிர்தராணி மனோன்மணி (யாழ்ப்பாணக் கல்விநிலையம்) அ. ம. அல்பேட் (Lanka Pharmaceutical Corp) தேவி ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற ஆசிரியை செபமாலை அடைக்கலம் தானியேலின் சகோதரியுமாவார்.

இவரின் பூதவுடல் அர்ச். கொஞ்சேஞ் சிமாதா சேமக்காலையில் 21—4—77 4-30 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

31/20 ரயில்வே லேன்
கொன்வென்ட் தெற்கு, யாழ்ப்பாணம்.

5962

# நீதிமன்ற விற்பனவு

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

முருகேசு நடராசா - வட்டுக்கோட்டை மேற்கு - வாதி

இல. ஈடு/950 எதிராக

1. வயித்திலிங்கம் நடராசாவும் பெண் 2. சிவபாக்கியமும், இருவரும் வசாவிளான் - பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/950-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரத்தின்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1977-ம் ஆண்டு சித்திரை மாதம் 22 ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

## தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 2425-00-ம் 24-10-1975 தொடக்கம் 30-6-1976 வரைக்கும் ரூபா 1900/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 478-90 சதம்.

## ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கோவிற்பற்று அராலி தெற்கிறை; "மருதாசிட்டி" நில. பர. 4½-ம் வீடும் அடுக்களையும் மற்றும் கட்டிடங்களும் கிணறும் வான் பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு றேட்டு, வடக்கு வேலு கந்தனின் உரித்தாளரின் ஆதனம், மேற்கு வேலுகந்தையாவின் ஆதனம், தெற்கு பொன்னையா சபாநாயகத்தின் உரிமைக்காரரின் ஆதனம் இவ்வெல்லைகள் விசாலங்கொண்ட ஆதனத்தில் 2/3 பங்கும் அதைச் சேர்ந்தவைகளும். முற்பதிவு இல. E 452/200.

நீ. அன்ரனிப்பிள்ளை
விற்பனவுக் கொமிஷனர்

22, கோயில் வீதி
யாழ்ப்பாணம். 19-1-77.

5958

---

# கேள்வி விளம்பரம்

## சாவகச்சேரி நகரசபை

சாவகச்சேரி நகரசபை சுகாதார மேற்பார்வையாளர், வருமான மேற்பார்வையாளர்கள், சந்தைவரிவசூலிப்பாளர்கள் ஆகியோருக்கான கோலவுடைகள் வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்டகேள்விகள் 9-5-77 மு. ப. 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம் 1977 ம் ஆண்டு மே மாதம் 6-ம் திகதி (6-5-77) ந. ப. 12-00 மணிவரை இவ்வலுவலகத்தில் ரூபா 50/-பிணைப்பணமும் திருப்பிதரப்படாத ரூபா 5/- கேள்விப்பத்திரப்பணமும் செலுத்தியதின்பேரில் வழங்கப்படும்.

கேள்விகள் விசேட ஆணையாளர் நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு தபாலுறையின் இடதுகை மேலுறையில் "கோலவுடைக்கான கேள்விகள் 1977" என எழுதப்பட்டு பதிவுக்கடிதத்தின் மூலம் 9-5-77 மு. ப. 10-00 மணிக்குக் கிடைக்கக் கூடியவகையில் அனுப்பப்படல்வேண்டும். அல்லது காரியாலயத்திலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் இடப்படல்வேண்டும்.

தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கட்டளையிடப்படும் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் இக்காரியாலயத்திற்குச் சமுகந்தந்துகோலவுடைக்குரியவர்களின் அளவுகளை எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

இவைகளைப் பற்றிய வேறு விபரங்கள் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

(அன்ரன் அல்பிரட்)
விசேட ஆணையாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி. 7-4-77.

5959

---

# அறிவித்தல்

## வட-இலங்கைச் சங்கீதசபை-யாழ்ப்பாணம்

## 1977ஆம் ஆண்டு கர்நாடக சங்கீதப் பரீட்சைகள்

1. சாத்திரப் பரீட்சைத் திகதி: 3-9-77 சனிக்கிழமை
2. செய்முறைப் பரீட்சைத் திகதி: 15-8-77-28-8-77
3. விண்ணப்பங்கள்: 31-5-77 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
4. பிந்தியவிண்ணப்பங்கள்: அதற்குரிய கட்டணப் பணத்துடன் ரூபா 5/- மேலதிகமாகக் கட்டிய வங்கிப் பற்றுச் சீட்டுடன் 7-6-77 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
5. (i) "பாட விதானமும் சாதனைக் குறிப்பேடும்" சங்கீதசபை அலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம். பிரதி ஒன்று விலை ரூபா 3/-
(ii) பரீட்சை விதிகளுக்கமையத் தயார் செய்யப்பட்ட விண்ணப்பத்திரங்களுக்கும் மற்றையஏனைய விபரங்களுக்கும்

தலைவர்
வட இலங்கைச் சங்கீதசபை,
வித்தியாபகுதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு முத்திரை ஒட்டி விலாசமிடப் பெற்றதபால் உறை அனுப்பிப்பெற்றுக்கொள்ளவும்.

(iii) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களைப் பதிவுத்தபாலில் அனுப்புவது உசிதம்.

K. SIVANATHAN,
வடஇலங்கைச் சங்கீத சபைத்தலைவரும்
வடபிரதேச வித்தியாதிபதியும்

தொடர்பு இல. E/E
வடஇலங்கைச் சங்கீதசபை
அலுவலகம்,
வித்தியாபகுதி,
யாழ்ப்பாணம். 20-4-77.

5960

---

# கழுத்து நெரித்துக் கொலை

கொழும்பு, புதன்

வீட்டிலிருந்து திடீரெனக் காணாமல்போன உக்குல என்ற நபரின் சடலம் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டு ஆறொன்றில் வீசப்பட்டிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

உனஸ்கிரிய என்ற இடத்தில் இம்மர்மக்கொலை நடைபெற்றுள்ளது. இவரது சடலம் ஆறு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டு பிரேத பரிசோதனை செய்யப்பட்டபோது இவர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டிருப்பது தெரிய வந்தது.

மர்மக்கொலைஞரைத்தேடி உனஸ்கிரிய பொலிஸார் தீவிர விசாரணை நடத்திவருகின்றனர். (உ)

•••

# ஓய்வு பெற்ற ஆசிரிய சங்கம்

யாழ்ப்பாணம். வியா

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினது ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்கம் இம் மாதம் 24-ம் திகதி ஞாயிறன்று காலை கூடவிருக்கிறது. யாழ். மலாயன் பென்சனியர் சங்க மண்டபத்தில் ஆசிரிய மணி நா. தம்பிரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். (அ)

---

# மறுமதிப்பீடு

ரூபாயின் புதிய மதிப்பீடு காரணமாக கீழே குறிக்கப்பட்டிருக்கும் விவசாய மருந்துவகைகளை, காணப்படும் விலைப்பட்டியல் முறைப்படி விற்கப்படும்:

விலைப் பட்டியல்

| | அளவு | தற்போதைய விலை | புதிய விலை |
|---|---|---|---|
| பொலிமட் எல். சி. 50% | 50 எம். எல். | ரூபா 10-00 | 9-60 |
| ,, ,, | 100 ,, | 19-50 | 18-70 |
| ,, ,, | 200 ,, | 38-50 | 36-90 |
| டெரக்கர் பி 5% குருணி | 2 கிலோ கிரும் | 37-50 | 35-45 |
| பெகார்ப் ஈ. சி 50% | 450 எம். எல். | 38-50 | 36-60 |
| லெபேசிட் ஈ. சி 50% | 50 ,, | 8-00 | 7-70 |
| ,, ,, | 100 எம். எல். | 12-00 | 11-45 |
| ,, ,, | 200 ,, | 23-50 | 22-40 |
| ,, ,, | 450 ,, | 48-50 | 46-05 |
| டிப்ரெக்ஸ் ஈ. சி 50% | 4 அவுன்ஸ் | 8-75 | 8-30 |
| ,, ,, | 8 ,, | 16-50 | 15-65 |
| உண்டேன் 3% குருணிகள் | 2 கிலோ கிரும் | 28-00 | 26-70 |
| ,, ,, | 25 கிலோ கிரும் | 280-00 | 264-25 |
| ஹெடோனல் 'டி' ஸ்பெசல் 3% குருணி | 2 கிலோ கிரும் | 13-00 | 12-45 |
| ஹெடோனல் 'எம்' ஸ்பெசல் 3% குருணி | 2 கிலோ கிரும் | 17-00 | 16-20 |
| உண்டேன் ஈ. சி 20% | 200 எம். எல். | 20-50 | 19-50 |
| ,, ,, | 450 ,, | 40-00 | 37-80 |
| தமரேன் எல். சி. 60% | 100 எம். எல். | 14-50 | 13-90 |
| ,, ,, | 200 ,, | 28-50 | 27-30 |
| ,, ,, | 450 ,, | 60-00 | 57-30 |
| மெடசைட் ஈ | 100 எம். எல். | 15-50 | 15-20 |
| ,, | 200 ,, | 29-50 | 28-95 |
| ,, | 450 ,, | 55-00 | 53-80 |
| குரேட்டர் 3% குருணி | 2 கிலோ கிரும் | 29-00 | 27-60 |
| ,, ,, | 25 ,, | 300-00 | 282-50 |
| மெற்றசிஸ்டொக்ஸ் 'ஆர்' | 100 எம். எல். | 11-75 | 11-30 |
| ,, ,, | 200 ,, | 21-25 | 20-35 |
| ,, ,, | 450 ,, | 50-00 | 48-90 |
| பேருசில் 25% ஈ. சி. | 100 எம். எல். | 17-00 | 16-15 |
| ,, ,, | 200 ,, | 33-00 | 31-35 |

**ஹேகெம் லிமிட்டெட்**

400, டீன்ஸ் வீதி — கொழும்பு - 10.



# எம். ஜி. ஆர். கட்சி ஆதரவை மொரார்ஜி நாடியதில்லை!

## அவரே வலியவந்ததாக பிரதமர் விளக்கம்

சென்னை, ஏப்ரல் 20

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையிலான அனைத்திந்திய அ. தி. மு. வின் ஆதரவைத்தாம் நாடவில்லை என்று பிரதமர் மொரார்ஜி தேசாய் கூறியிருக்கிறார். தங்கள் ஆதரவைத் தருவதாகக்கூறி அவர்கள் தாங்களாகவே என்னிடம் வந்தார்கள் என்றும் திரு. மொரார்ஜி தெரிவித்தார்.



ஜனதா அரசில் வேறுபட்ட கருத்துடையவர்கள் அங்கம் வகிக்கவில்லை என்று அவர் சொன்னார். 30 வருட காலமாக காந்தியத்துக்காகஉழைத்தவர்கள்தான் ஜனதா அரசில் இருக்கிறார்கள் என்றார் பிரதமர்.

தொடர்ந்து காந்தியத்தை நிலைநாட்டுவதில் தமது அரசு பாடுபடும் என்றார் அவர்.

பத்திரிகை நிருபர்களிடம் பேசிய திரு. மொரார்ஜிமேலும் கூறியதாவது:

### பிராந்தியக் கட்சிகளுக்கு ஊக்கமளிக்கக்கூடாது

பிராந்தியக்கட்சிகளை ஆதரிக்கக்கூடாது. நாட்டில் இரண்டு அல்லது மூன்று தேசியக்கட்சிகள் இருக்கக்கூடிய விதத்தில் பொதுமக்கள் கருத்தை ஏற்படுத்தவேண்டும்.

### தேர்தலில் பணவலிமை

கடந்த பொதுத்தேர்தலில் நாடுமுழுவதும் பணவலிமை பயன்படுத்தப்பட்டபோதிலும் தென்மாநிலங்களைப் போன்று வடமாநிலங்களில் அந்தப்பணவலிமையினால் மக்களை ஏமாற்ற முடியவில்லை. அவர்கள் கடந்த அரசினால் ஏற்கனவே ஏமாற்றப்பட்டுவிட்டனர் என்றும் திரு. மொரார்ஜி கூறினார். (இ)

## ஆர்ப்பாட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்!

### பாகிஸ்தானில் இதுவரை 180பேர்பலி

கராச்சி, ஏப். 20

பாகிஸ்தானில் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்களைச் செய்துவரும் இவ்வேளையில் எதிர்க்கட்சியினருக்கு எதிராக அரசு ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டங்கள் செய்துவருகின்றனர்.

இரு ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையில் நேற்று பல இடங்களில் மோதல்கள் இடம்பெற்றன.

நேற்று லாகூரில் நடைபெற்ற மோதலில் 8 பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் சுமார் ஒன்றரை மாதமாக நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டங்களில் இதுவரை 180 பேர் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## தான்ஸானியா அதிபர் திரும்பினார்

புதுடில்லி, ஏப். 20

தமது பாரத விஜயத்தை முடித்துக்கொண்டு தான்ஸானியா துணை அதிபர் திரு. தும்பே நேற்று ஸ்ரீநகர் புறப்பட்டார்.

அவரை பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயும், வெளியுறவு அமைச்சர் திரு. வாஜ்பாயும் விமான நிலையத்தில் வழியனுப்பிவைத்தனர். (உ)

## பாலசரஸ்வதியின் நாட்டிய திரைப்படம்

சென்னை, ஏப். 20

பத்மவிபூஷண்பட்டம்பெற்ற திருமதி பாலசரஸ்வதியின் நாட்டியத்தைச் சித்தரிக்கும் 'பாலா' என்ற திரைப்படம் நேற்று சென்னையில் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு தற்காலிக ஆளுநர் திரு. கோவிந்தநாயர் பிரதம விருந்தினராக இவ்வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டார்.

''வருங்கால சந்ததிக்கு ஒரு உத்வேகத்தை அளிக்கக் கூடிய வகையில் இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது'' எனப் பாராட்டுத் தெரிவித்த திரு. கோவிந்தநாயர் ''பாரத ஜனாதிபதியால் அளிக்கப்பட்ட பத்மவிபூஷண் பட்டம் திருமதி பாலசரஸ்வதிக்குமிகப்பொருத்தமானதுதான்'' என்றும் சொன்னார்.

திருமதி பாலசரஸ்வதிக்கு அவர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். இத்திரைப்படத்தை தமிழ்நாடு அரசின் உதவியுடன் பம்பாயிலுள்ள நாட்டியக்கலை தொடர்பான அங்கம் ஒன்று தயாரித்திருந்தது.

இத்திரைப்படத்தை உலகப் புகழ்பெற்ற இயக்குநர் சத்திய ஜித்ரே இயக்கியுள்ளார். (உ-இ)

## சமாச்சாரின் எதிர்காலம்? குழு ஆராயும்

புதுடில்லி, ஏப். 20

இந்திய செய்தி ஸ்தாபனமான 'சமாச்சா'ரின் எதிர்காலம் பற்றி ஆராய்வதற்காக 12 உறுப்பினர்கள் கொண்ட கமிட்டி ஒன்றை அரசாங்கம் நியமித்துள்ளது.

இக்கமிட்டியில் பல பத்திரிகையாளர்கள், பத்திரிகை நிபுணர்கள், நிருபர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## 9 மாநில அரசுகளைக் கலைக்கும் அரசின் யோசனைக்கு காங்கிரஸ் கண்டனம்

### அரசு ஆதரவாளர்கள் வரவேற்பு

புதுடில்லி, ஏப். 20

லோகசபைத்தேர்தலில் காங்கிரஸ்கட்சி படுதோல்வி அடைந்த ஒன்பதுமாநிலங்களில் உள்ள காங்கிரஸ் சட்டசபைகள் கலைக்கப்பட்டு புதியதேர்தல்கள்மூலம் மக்களின் கட்டளையைப் பெறவேண்டும் என்ற மத்தியஅரசின் ஆலோசனையை மாநில அரசுகளின் முதல் மந்திரிகள் எதிர்த்துள்ளனர்.

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் குறிப்பிட்ட 9 மாநில முதல்வர்களில் 8 பேர் அரசின் இந்த யோசனையை வன்மையாகக் கண்டித்தனர். பீகார் முதல்வர்மட்டும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

மத்திய அரசின் இந்த ஆலோசனை ஜனநாயகத்துக்கு விரோதமானது, அரசியல் சாசனத்தை மீறுவது என்று அவர்கள் தமது கண்டனத்தில் தெரிவித்துள்ளனர். இன்னமும் இச்சட்டசபைகளின் 5 ஆண்டுகள் முடியவில்லையே என்கிறார்கள் இவர்கள்.

### அரசு ஆதரவாளர்கள் வரவேற்பு

அரசின் இந்த ஆலோசனை அரசியல்சாஸனத்துக்கு விரோதமானது என்று காங்கிரஸ் கட்சி கூறிவரும் அதேவேளையில் அரசுக்கு ஆதரவான கட்சிகள் இந்த ஆலோசனையை வரவேற்றுள்ளன.

லோகசபைத் தேர்தலில் படுதோல்வியடைந்த காங்கிரஸ் கட்சி மாநில சட்டசபை ஆட்சிகளில் தொடர்ந்து ஒட்டிக்கொண்டிருப்பது தான் ஜனநாயகத்துக்கு விரோதமானது என்று ஜனதா கட்சித் தலைவர்கள் கூறியுள்ளனர்.

இதேசமயம் முதல் மந்திரிகள் இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இன்னும் 4, 5 தினங்களில் பதில் தந்துவிடுவார்கள் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் நம்பிக்கை தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-இ)

## அரசின் ஆலோசனை பயமுறுத்தல் நடவடிக்கை

### பக்தவத்சலம கருத்து

சென்னை, ஏப். 20

''ஒன்பது மாநிலங்களில் காங்கிரஸ் அரசுகளைக் கலைத்துவிட்டு மக்களின் தீர்ப்பை அறிவதற்காக மீண்டும் தேர்தல் நடத்தவேண்டும் என்ற மத்தியஅரசின் ஆலோசனை ஒரு பயமுறுத்தல் நடவடிக்கையாகும்' என்று முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சரும், காங்கிரஸ் தலைவருமான திரு. எம். பக்தவத்சலம் கூறியுள்ளார்.

நேற்று சென்னையில் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசிய அவர், 'ஜனநாயகநெறிகளை மீறும் செயலாக இந்த ஆலோசனை இருக்கிறது' என்று மேலும் அவர் சொன்னார். (உ-இ)

## தமிழ்நாடு புதிய கவர்னர்

சென்னை, ஏப்ரல் 20

திரு. பிரபுபாத்பட்வாரி தமிழ்நாடு கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த திரு. பட்வாரி ஒரு காந்தியவாதி.

காங்கிரஸ் ஆட்சியின்போது கவர்னராகப் பதவிவகித்த மோகன்லால் சுக்காடியா வெளியேறியதைத் தொடர்ந்து தற்காலிக கவர்னர் நியமிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

ராஜஸ்தான், மகாராஷ்டிரம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கும் புதிய கவர்னர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திரப்பிரதேச கவர்னராக திருமதி சாரதா முக்கர்ஜி என்ற பெண்மணி நியமனம் பெற்றுள்ளார். (இ)

• • •

## கருணாகரன் ராஜினாமா

திருவனந்தபுரம், ஏப். 20

சிறைபிடிக்கப்பட்ட என்ஜினியரிங் மாணவர்கள் இருவர் சிறையிலிருந்து காணாமல்போனதை அடுத்து கேரளத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக கேரள முதன்மந்திரி திரு. கருணாகரன் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். (இ)


# மிளகாய் பயிர்செய்கிறீர்களா?

அப்படியானால் குருமன் நோயை கட்டுப்படுத்த இன்றே பாவியுங்கள்

BAYER

பொலிமற் எல்.சி 50%

மேற்கு ஜேர்மன் பாயர் ஸ்தாபனத்தின் புதிய தயாரிப்பு, ஒரு சிறந்த சர்வ பூச்சி நாசினி



மேலும் பொலிமற், திரிப்ஸ், அழுக்கணவன், வெண் ஈ, சிற்றுண்ணி, போஞ்சி ஈ, தத்துக்கிளி துளை புழுக்கள், ஆகியவற்றை கீழ்வரும் பயிர்களில் திறமாக கட்டுப்படுத்தும்.

- நெல்
- புகையிலை
- காய்கறி
- பயறுவகை
- உருளைக்கிழங்கு
- போஞ்சிவகை
- பூஞ்செடி
- கோப்பி
- திராட்சை
- தோடை
- பருத்தி
- வெங்காயம்

பொலிமற் பயிர்களை ஊக்கமாகவும், திடகாத்திரமாகவும் வளரச்செய்யும்.

பொலிமற் உடன் கெந்தகம் கலக்கப்படாது
பயிர்களை பாதுகாக்க தாமதியாது
பாவியுங்கள் பொலிமற்,

தயாரிப்பாளர்.

ஹேகெம் லிமிடெட்

400 டீன்ஸ் ரோட் கொழும்பு-10

டெலிபோன் 93563 - 96331

Melville Assouw Designs

### மணிவாக்கு

மனித முயற்சிக்கும் விதிக்கும் இடையில் இடையறுப் போர் உளது. யாம் முயற்சிப்போம். பயனை இறைவன் கையில் விட்டுவிடுவோம்.

—காந்திமகான்


# ஈழநாடு
# THE EELANADU


## பல்கலைக்கழகத்தில் சிங்கள தமிழ் வகுப்பு

சிங்களவர் அல்லாதவர்களுக்குச் சிங்களமும் தமிழரல்லாதவர்களுக்குத் தமிழும் போதிக்கும் ஒரு திட்டத்தை இலங்கைப் பல்கலைக்கழகம் முதல் தடவையாகச் செயல்படுத்தத்தொடங்கியிருக்கிறது.

இந்த வகுப்பில் எழுபத்தைந்து பேர் ஆரம்பத்தில் கலந்துகொண்டனர். இவர்கள் சிங்களத்திலோ தமிழிலோ தேர்ச்சியில்லாதவர்கள். இத்தனை பேரும் உத்தியோகத்திலிருப்பவர்களாம்

பல்கலைக்கழகத்தின் இந்தத்திட்டம் பாராட்டுக்குரியது. எப்பவோ இத்திட்டத்தைக்கொண்டுவந்து செயல்படுத்தியிருக்கவேண்டும்.

உத்தியோகத்திலிருப்பவர்கள் பொதுமக்களுடன் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்.

இவர்கள்நாட்டின் எந்தப் பகுதிக்கும்சென்று கடமையாற்றவேண்டியவர்கள்.

எனவே பொதுமக்களுடன் தொடர்புகொள்வதற்கு மக்களுக்குத் தெரிந்த மொழி உத்தியோகத்திலிருப்பவர்களுக்குத் தெரிந்திருப்பது அவசியம்.

மொழிதெரியாததால் நாட்டில் பல இடங்களிலும் பல பிரச்சினைகள் எழுந்தது நாடறிந்த விஷயம்.

தமிழ்தெரியாத பொலிசார் தமிழ்ப்பகுதிகளில் கடமையாற்றியதன்மூலம் பல பிரச்சினைகள் எழுந்ததும் தெரிந்ததே.

உத்தியோகத்திலிருப்பவர்களும் அரசாங்க உத்தியோகத்துக்குத் தெரிவு செய்யப்படுபவர்களும் குறிப்பிட்ட காலத்துக்குள் உத்தியோக மொழியான சிங்களத்தில் தேர்ச்சிபெற வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மூலம் கல்வி கற்றவர்களும் அரசாங்க உத்தியோகத்துக்குத் தெரிவுசெய்யப்படும்போது சிங்களத தேர்ச்சிநிபந்தனையை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இதற்குப்பதிலாக அரசாங்க உத்தியோகத்திலிருப்பவர்களும் அரசாங்க உத்தியோகத்துக்குத்தெரிவு செய்யப்படுபவர்களும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் குறிப்பிட்ட காலத்துக்குள் தேர்ச்சிபெற வேண்டுமென்ற நிபந்தனை கொண்டுவரப்பட்டால் பல பிரச்சினைகள் நீங்கிவிடும்.

இதேசமயம் நாடு முழுவதிலும் மும்மொழித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தால் நாட்டில் மொழிப்பிரச்னையே தீர்ந்துவிடும்

இந்தியாவில் இந்திதான் ஆட்சிமொழியாக இருக்கிறது என்றாலும் இந்தி பேசாத மக்கள்மீது இந்திமொழி கட்டாயமாக திணிக்கப்பட மாட்டாதென்று புதிய அரசாங்கமும் உறுதியளித்துள்ளது.

மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகளே ஆட்சி மொழியாக இருக்கின்றன.

இதேசமயம் இந்தியாவில் மும்மொழித்திட்டமும் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றது.

ஒரு மாநிலத்திலுள்ள மக்கள் தங்கள் தாய்மொழியுடன் இந்திமொழியையும் மற்றொரு மாநிலமொழியையும் கற்பதற்கு வழிசெய்யப்பட்டுள்ளது. இந்திமொழிக்குப் பதிலாக ஆங்கிலம் கற்கவும் மற்றொரு மாநில மொழிக்குப் பதிலாக ஆங்கிலம் கற்கவும் வழிசெய்யப்பட்டிருக்கிறது.

நமதுநாட்டைப்பொறுத்தவரையில் இதுபெரும் பிரச்னையல்ல. மக்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்கு இரண்டு மொழிகளும் இருபகுதியினருக்கும் தேவை.

இருசமூகத்தின் இலக்கியச்செல்வங்களைத் தெரிந்துகொள்வதற்கும் இரு மொழிகளும் அவசியம்.

வளர்ந்துவரும் விஞ்ஞான அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆங்கிலம் அவசியம்.

சிங்களம் தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்றுமொழிகளும் சகல பாடசாலைகளிலும் கற்பிப்பதற்கு வசதி செய்வது கஷ்டமல்ல. மூன்று மொழிகளைக் கற்பது பிள்ளைகளுக்குக் கஷ்டமல்ல.

உத்தியோகத்துக்குத்தான் கல்வி என்ற நிலை மாறிவருகிறது. எனவே அறிவைப் பெறுவதற்கு மும்மொழிகளும் அவசியமென்பதை மக்கள் உணர்ந்துகொள்வார்களென்பதில் சந்தேகம்வேண்டியதில்லை.

## ''வீரசைவ வளர்ச்சிக்கு அறிஞர் மாநாடுஅவசியம்''

மாவிட்டபுரம், புதன்

'ஈழத்தின் பலபாகங்களிலும் பாரத நாட்டின் பல மாநிலங்களிலும் அநாதி காலம் தொட்டே மிகச்சிறப்புற்றோங்கி வளர்ந்து வந்த வீரசைவ மதம் இன்று சிறிது தளர்வடைந்து அருகிவருவது போல் தெரிவதற்கு இம்மதத்தைச் சார்ந்தவர்களின் அசிரத்தையே காரணம். கூடிய விரைவில் இச்சமய வளர்ச்சியின் பொருட்டு இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் கல்விமான்களையும், பேரறிஞர்களையும் கூட்டி மகாநாடு ஒன்றினைச் சிறப்புற நடத்த ஏற்பாடு செய்தல்மிக அவசியமாகும்.

இவ்வாறு வீரசைவ குருமகா சந்நிதானம் சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்களின் 75-வது ஆண்டுப் பூர்த்தி வைரவிழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய சமாதான நீதவான் திரு. ச. த. சின்னத்துரை கூறினார்.

காங்கேசன்துறை வீரபத்திரர் ஆலய வீதியில் அமைந்த அரங்கில் நடைபெற்ற இவ் விழாவிற்கு முன்னதாக காங்கேசன்துறை ஐயனார் கோவிலில் வைத்து குருமகாசந்நிதானத்திற்குசதாபிஷேகம்செய்து வைக்கப்பட்டு முடிசூட்டப்பட்டுசிவநெறிப் புரவலர் திரு. க. கனகராசாவினால் அவருக்கும், காங்கேசன்துறை வீரபத்திரர் ஆலய அச்சகர் சிவஸ்ரீ சி. நடராசா ஐயருக்குப் பொன்னாடை போர்த்

[7ம் பக்கம் பார்க்க]

### நல்லைஞானசம்பந்தர் ஆதினத்தில்

# திருநெறியதெய்வீகமாநாடும்

## ஞானசம்பந்தப் பெருவிழாவும்

நாளும் இன்னிசையாற்றமிழ் பரப்பிய, நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப்பெருமானுருக்கும், திருநெறிய தெய்வீகச் சைவத் தமிழ் இசைக்கும், முப்பெரும் புராணங்களுக்கும், சைவசித்தாந்தம், திருமுறை, திருமறை ஆகியவற்றுக்கும் பெருவிழா எடுக்கின்றது நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்.

ஆண்டு தோறும் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகுரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகளின் திருவுளப்பாங்கின்வண்ணம், இத்திருநெறிய தெய்வீக மாநாடும், ஞானசம்பந்தப் பெருவிழாவும் நடைபெற்றுவருவதைச் சைவப் பெருமக்கள் நன்கறிவர்.

ஈழத்திருநாட்டிலே ஆதீனம் இல்லாக் குறையை நிறைவு செய்து, நல்லை நகரில் ஞானசம்பந்தர் ஆதீனம் அமைத்து, ஆதீன சம்பிரதாயம் என்பவற்றையும் எமது ஈழத்து மக்களுக்குப் புகட்டிய ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் தமிழகத்தில் நடைபெறுவதைப்போல, இங்கும் இப்பெருவிழாவினை எடுத்துவருவது நாம் செய்த பாக்கியமே.

### தாவடியூர் சம்பந்தன்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் பின்பு, ஈழத்தில் மாத்திரமல்ல, தமிழகத்திலும், சிங்கப்பூர், மலேஷியா ஆதியாம் நாடுகளிலும் சைவத்தையும் தமிழையும் வளர்த்து வரும் குருமகாசந்நிதானம் அவர்கள் இத்தெய்வீகப் பணியை முன்னின்று நடாத்தி வழிகாட்டிவருவது மிக மிக மகிழ்ச்சிக்குரியதொன்றாகும்.

இவ்வருடத்தின திருநெறிய தெய்வீகமாநாடும்ஞானசம்பந்தப்பெருவிழாவும், ஏப்ரல் 22ந் திகதி ஆரம்பமாகி மே 1ம் திகதிவரை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளன.

ஞானப்பால் உற்சவம், பொற்றாள உற்சவம், மறைக்கதவம், பூம்பாவை உற்சவங்கள், முத்துச்சிவிகை, பொற்கிழி, திருக்கல்யாணம், சிவசோதி ஐக்கியம் ஆதியாம் இன்னோரன்ன நிகழ்ச்சிகளையெல்லாம் எமது சைவப் பெருமக்கள் பார்த்துப் பக்திகொண்டாடி, வழிபாடாற்றிப் பேரின்பம் பெறத் தகுந்தவாறு, பெருவிழாவாகக் கொண்டாடப்படவுள்ளது.

தினமும் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளில் பண்ணிசையரங்குகள் சிறப்புச் செய்யவுள்ளன.

இம்மாதம் 29ந் திகதி, ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள், காலையில் பூஜை முகத்தில் இயல், இசை, நாடக, சிற்பக் கலைஞர்கள், கவிஞர்கள், அறிஞர்கள் ஆகியோருக்குப் பட்டம் அளித்துப் பாராட்டும் வைபவமும் இப்பெருவிழா நிகழ்ச்சிகளில் இடம்பெறவுள்ளது.

''சேரவாரும் செகத்தீரே'' என்று ஞானசம்பந்தர் ஆதீனம் சைவப் பெருமக்களை அழைக்கின்றது. கரும்பு தின்னக் கைக்கூலியா?

தேனென்ன இசை கலந்து, சைவத் திருமருந்தைத் தருகிறது ஞானசம்பந்தர் ஆதீனம். அதை உட்கொண்டு தீராப் பிணிகள் போக்கும் எம்பெருமானின் பேரின்பத்தைப் பெற்றுய்வோமாக!

### ஆசிரியருக்குக் கடிதம்

## 'இலங்கையில் பூரண மதுவிலக்கு வேண்டும்

மது என்பது கள் மாத்திரமன்று. சாராயம், விஸ்கி, ஜின் பிராந்தி முதலானவைகளும் மதுவே.

மது என்னும் மாயப் பிசாசிடப் சிக்குண்டு சீரழிந்தோர் சீரழிவோரை எல்லாம் கணக்கிட்டு கூறிட முயலுதல் கடற்கரை மணலைக் கணக்கிட முயலுதலுக்கொப்பாகும்.

மதுப்பழக்கம் உள்ளவர்களின் வாழ்வுதான் நாசமெனின் அவரை அண்டி வாழ்வோரின் வாழ்வுமல்லவா நாசமாகின்றது.

மது காரணமாகவே இந்த நாட்டில்மிகப் பெரும்பாலான குற்றவியல் செயல்கள் நிகழ்கின்றன என்பது நாடறிந்த இரகசியம்.

இவையெல்லாம் கண்டும் கேட்டும் அறிந்து கொண்டும் மது அரக்கனின் கொடும் பிடிக்குள் அகப்படுகின்ற மானிடரைப் பார்த்து அழுவதா? இன்றேல் சிரிப்பதா?

'மதுவுண்ணாதவன் நாகரிகமற்றவன்' என்று கூறுமளவிற்கு நிலைமை மோசமடைந்துவிட்டதென்பதும் மறைக்க முடியாததொரு உண்மையேயாம்.

காந்தி, ராஜாஜி போன்ற ஞானிகள் மதுவிலக்குக்காக அல்லும் பகலும் அயராது உழைத்தவர்கள்.

மதுவுண்பதனை இந்து மதம் போன்ற பிறமதங்களும் தடைசெய்கின்றனவே.

இன்று எமது அயல்நடான பாரத அரசு பாரதமெங்குமே பூரண மதுவிலக்கினைச் செயற்படுத்திடத் தீவிரமாகச் சிந்திக்கின்றது.

தர்மதுவீபம் என வாயாரப் புகழப்படும் இலங்கையிலோவெனில் நிலைமைவேறு புகைவண்டிகளில் மது விற்பனை, வாடி வீடுகளில் மதுவிற்பனை, விருந்தினர் விடுதிகளில் மது விற்பனை, எங்குமே மது! மது!! மது!!! எங்கணும் மது மயமே! மதுவுண்ணும், மதுபுழங்கும் இடங்களிலெல்லாம் அச்சம் அமைதியின்மை காடைத்தனம் முதலானவைகளே குடிகொண்டிருக்கும். மதிப்பு மரியாதை விரும்பும் மக்கள் எவரும் மது அரக்கன் நடமாடும் இடத்துக்கண்மையிலேனும் செல்ல அஞ்சுவர்! வெறுப்பர்!

மதுவினால் இலங்கை அரசுக்குப் பாரிய வருவாய் உண்டென்பது உண்மைதான். ஆனால் இலங்கை அரசு இந்த வருவாயினை மட்டுமேகருத்திற்கொண்டு மென்மேலும்கள்ளுக் கடைகளையும்மேல்நாட்டுக் குடிவகைகள் விற்கும் கடைகளையும் வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி திறந்து வைத்திட அனுமதி வழங்குவது, மக்களின் நலம் பேணும் அரசின் செயல்தானா எனச் சிந்திக்கத் தூண்டுகிறது.

மக்களின் தேவைகளை நிறைவு செய்திடத் தேவையான அதிக வருவாயினை அரசுக்கு மதுவரியின் மூலமேயே பெற்றுக் கொள்ள முடிகிறது எனக் கூறிக்கொண்டு மதுக்கடைகளை திறந்திடுதல் நன்றாகுமா?

மதுவரி பெருகவேண்டின் மதுவிற்பனை அதிகரிக்கவேண்டும். மதுவை யார் வாங்குவார்கள்? இந்த நாட்டு மக்கள் தானே! மதுவுண்ணும் மக்கள் நல்லாரோக்கியமுடையவர்களாக, நீதி போற்றுவோராக பண்பாளராக இருப்பார்களா? இல்லையே. மதுவருந்தும் மக்கள் தம்நலமிழந்து வளமான வாழ்வினையுமிழந்து மண்ணாகி விடுவார்கள். மது அருந்தும் மக்கள் மாக்களாகிவிடுவார்கள், ஆதலின் மக்களின் வாழ்வைச் சீரழித்து அதிக வருவாயினைச் சேர்த்து மக்களின் தேவைகளை நிறைவுசெய்ய முனைவதென்பது கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குவது போன்றதே.

இலங்கை அரசு மாதத்தில் ஒருநாள் வரும் பூரணைதினத்தன்று மாத்திரம் மதுக்கடைகளை மூடும்படி பணித்துள்ளதால் எதுவித பயனுமேயில்லை.

மதுக்கடைகளை இலங்கை அரசு நிரந்தரமாகவே மூடும் வண்ணம் அதிவிரைவில் சட்டம்செய்தல்வேண்டும். இன்றேல் நாடு சுடுகாடாக மாறிடும் நிலையினை எய்துதல்கூடும்.

மதுவிலக்கினால் ஏற்படும் வருவாய் வீழ்ச்சியினை ஈடு செய்யும் வண்ணமும் அதனை வேலைஇழப்போர்க்கு மாற்று வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் வண்ணமும், இலங்கை அரசு நல்ல பல தொழிலகங்களைத் தொடங்குதல்வேண்டும்.

மதுஒழிந்தால்தான் மக்களிடையே நிலவும் தீண்டாமை என்னும் பெருநோயையும் ஓரளவுக்காயினும் ஒழித்திட முடியும் என்பதும் எனது அபிப்பிராயமாகும். இவையாவும் இலங்கை அரசுக்கு சமர்ப்பணம்.

--'ஶ்ரீகுரு'.

திருக்கேதீஸ்வரம்.

## பாவனைக்கு உதவாத அரிசியாம்

வண்ணார்பண்ணை, புதன்

கடந்தவாரம் புதுவருடத்தை முன்னிட்டு வேலணைப்பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தால் இப்பகுதிப் பாவனையாளர்களுக்குப் பங்கீடு செய்யப்படவிருந்த அரிசி மூடைக்கணக்கில் தேங்கிக்கிடக்கின்றது. இந்த அரிசியை தமதுஉணவுக்குப்பாவிக்க முடியாதென்று உணர்ந்ததால் அதிகமான பாவனையாளர்கள் இதனைப்பெறமுயலவில்லை. இதனால் பல ஆயிரக்கணக்கான உழுத்தயில்சாட் அரிசி இச்சங்கக்கடைகளில் வாரம் தோறும் தேங்கிக்கிடக்கின்றன.

மக்கள்பாவிக்க முடியாதென வெறுப்போடு ஒதுக்கிவிட்ட இந்தஅரிசியை இவ்வாரம் மீண்டும்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. இந்தநிலை இப்பகுதிப் பாவனையாளர்களைத் திகைப்பில் ஆழ்த்தியுள்ளது. இச்சங்கத்தின் கிளை ஒன்றில் 5000 றுத்தல் அரிசி கடந்த வாரம் எஞ்சியுள்ளதாகவும் இந்த எஞ்சியஅரிசிக்கு பதிலாக வேறுஅரிசி கொடுக்கப்படாது, இதேஅரிசியை இவ்வாரத்திற்கும்கொடுக்கச்சங்கம் உத்தேசித்துள்ளதாக தெரியவருகிறது.

கடந்தவாரம் இலவசப்புள்ளிக்கும், காசுப்புள்ளிக்கும் உழுத்துப்போன புளுவுள்ள இதே அரிசியே அனுப்பப்பட்டதாகவும், இலவசப்புள்ளிகளுக்கு மட்டும் பாவனையாளர்கள் இந்த அரிசியைப் பெற்றனர் என்றும் காசுக்கான அரிசியை மக்கள்பெறவில்லை என்றும்இச்சங்கத்தின் கிளைஉறுப்பினர்கள்கவலை தெரிவித்தனர்

(அ)

கொழும்பு, புதன்

லிபியா இலங்கையிடம் இருந்துகூடுதலான தேயிலையை இறக்குமதி செய்யவுள்ளது.

கடந்த இரு மாதங்களில் லிபியா 1 கோடி 97 லட்சம் ரூபாபெறுமதியானதேயிலையை இலங்கையிடம் இருந்துகொள்வனவு செய்தது. (உ)

# முதன் முதலில் தமிழ்நாடு கோரியவர் யார்?

— காரைநகர் அசோகன் —

முதன் முதல் தமிழ்நாடு கோரியவர் திரு. ஆ. தியாகராசா தான் என்று திரு. மு. அம்பலவாணர் 'ஈழநாடு, இதழில் எழுதியிருந்ததையும், இதனைஆசரித்து 16-4-77 'ஈழநாடு' இதழில் திரு கா. சிவயோகநாதன் எழுதியிருந்ததையும்அன்பர்கள்வாசித்திருப்பார்கள். இந்த முடிபு உண்மைக்கு முற்றிலும் மாறுபட்டது. ''சிங்களவர்களுக்குள்ள அத்தனை உரிமைகளும் தமிழர்களாகிய எங்களுக்கு இல்லாவிட்டால் நாம் தமிழர் ராச்சியத்தை நிறுவவேண்டும்'' என்று முதன் முதற் குரல் எழுப்பியவர் மூதறிஞர் திரு. எஸ் .ஜே. வி. செல்வநாயகமேயாவர். இதனை நாம் 25-1-47ல் வெளிவந்த இந்துசாதனப்பத்திரிகை வாயிலாக அறியலாம்

பின்னர் 'தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழவேண்டுமானல் அவர்களுக்கென ஒரு இராச்சியம் இருத்தல் வேண்டும்'' என்பதனை நன்கு விளக்கித் தர்க்கரீதியாகப் பலகாரணங்களைக் காட்டி ஆணித்தரமாக 'இனி நமக்கு வழி என்ன?' என்ற தலைப்பில் 13-1-48 இந்துசாதனத்தில் எழுதியவர் பேரறிஞர்திரு ஸ்ரீதரன்ஆவார். இதன் பின்னர், 1951ம், 52ம் ஆண்டுகளில் தமிழ் நாட்டுக்கொள்கையை மக்கள் மனதில் இடையிடையே விதைத்துக் கொண்டிருந்தவர் திரு. செ. சுந்தரலிங்கம். இதன் பின்னர்தான் திரு. ஆ. தியாகராசா கந்தரரின் ஆலோசனைப்படி தமிழ் நாடு கோரிக் குரலெழுப்பினர் பின்பு, பிரபல கல்விமானும், சமசமாஜக்கட்சி ஆதரவாளருமாகிய திரு ஹன்டி பேரின்பநாயகம், 'தமிழர்களுடையஉரிமைகள்வழங்கப்படாவிட்டால் அவர்கள்பிரிந்துசெல்வதைவிட வேறுவழியில்லை' என்று 1956 ஆம் ஆண்டு (தேதி ஞாபகமில்லை) வெளிவந்த ஈழகேசரிப் பத்திரிகையில் எழுதியுள்ளார்.

இச் சந்தர்ப்பத்தில், ''தனி நாடு கோருவது தற்கொலைக்கு ஒப்பானது'' என்றும், 'மொழியடிப்படையில் நாட்டைப் பிரிக்க வேண்டுமென்பது சம்பந்தமான பிரேரணை ஏதாவது தேசிய அரசுப் பேரவைக்கு வந்தால் அதனை எதிர்த்து வாக்களிப்பேன்' என்றும் திருவாய் மலர்ந்தருளிய திரு. ஆ. தியாகராசா தாம் தனித்தமிழ்நாடு அமைக்கப்படவேண்டிய தன் அவசியத்தை வற்புறுத்தி முதன் முதல் 1954ம் ஆண்டு ஒரு நூலை எழுதி வெளியிட்ட பெருமைக்குரியவர் என்பதை நாம் நினைவு கூராவிட்டால் தமிழர்களாகிய நாம் நன்றி கெட்டவர்கள் என்ற குற்றத்திற்கு ஆளாவதுடன் திரு. தியாகராசாவை அகௌரவப் படுத்துபவர்களுமாவோம்.

## மனிதாபிமானமிக்க அடிப்படைப் பிரச்னையில்

# ஒரு சில மாதத்தில் கொள்கை மாறியவர்கள் 'தனிநாடு' கோரிக்கையில் நின்றுபிடிப்பார்களா?

— பலாங்கொடை- த. மனோகரன் —

''ஈழநாடு'' அமைத்துள்ள விவாதமேடையிலே வெளிவரும் கருத்துமோதல்கள் ஓரளவுக்கு மறைந்து கிடக்கும் அரசியல் உண்மைகளை வெளிக் கொண்டுவருவதாக அமைந்திருப்பது வரவேற்கக்கூடியது. கருத்துமோதலிலே உண்மை நிலை நாட்டப்படும். தவறுகள் உணர்த்தப்படும் என்பது மறுக்க முடியாத உண்மை. அந்த வகையிலே 'ஈழநாடு' வாசகர்கள் கருத்துக்கு எனது கருத்துக்களையும் எடுத்துக் கூறுவது பொருத்தமே.

இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியிலே ஒன்றிணைந்துள்ள அரசியல் கட்சிகளையும் அதன் தலைமைப் பதவிகளை அலங்கரிப்பவர்களையும் நம்பித் தமிழர்கள் விடுதலைப்போராட்டத்தில் இறங்க முடியுமா? என்பது எனது சந்தேகம். ஏனெனில் இந்திய வம்சாவழித் தமிழர்களின் குடியுரிமையைப் பறிக்க உதவியாகத் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் அவரது சகபாடிகளும் இருந்தார்களென்று குரலெழுப்பி, இந்தியத் தமிழர்களுக்காகக் குரல்கொடுத்துப் புதிய கட்சியமைத்துப் போராடப் புறப்பட்ட திரு. எஸ். ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலானவர்கள் அதே குடியுரிமை பறிக்கப்பட்ட தமிழர்களில் ஐந்தே கால் லட்சம் பேரை நாட்டைவிட்டு வெளியேற்ற வகை செய்த சிறிமா - சாஸ்திரி ஒப்பந்ததைப் பாராளுமன்றத்திலே சட்டமாக நிறைவேற்ற உதவி செய்தது வரலாற்று உண்மை.

1964-ல் புதுடில்லியில் மேற்படி ஒப்பந்தம் கைச்சாத்தானதும் அதை எதிர்த்துக் குரலெழுப்பிய தமிழரசுக்கட்சி 1965-ல தமது எதிர்ப்பைக் கைவிட்டது மட்டுமல்ல அந்த ஒப்பந்தத்தை அமுலாக்க வேண்டிய உதவிகளையும் செய்தது. ஒரு மனிதாபிமான மிக்க அடிப்படைப் பிரச்னையில் ஒரு சில மாதங்களுக்குள் கொள்கை மாறியவர்கள் 'தனிநாடு' கோரிக்கையை உறுதியாகப்பற்றி நிற்பார்களென்று நம்பத்தான் முடியுமா? எனது ஐயுறவு ஆதாரமற்றது என்று சிந்திப்போர் யாராலும் கூறத்தான் முடியுமா? இதையிட்டு விளக்கமளிக்க வேண்டிய பொறுப்பு தமிழரசுக்கட்சிக்கே உரியது. அளிப்பார்களா: தமிழரசுத் தலைவர்கள் இதற்கு விளக்கம்?

### தமிழ் அரச ஊழியர்

1968 அக்டோபரில் காலஞ்சென்ற திரு. மு. திருச்செல்வத்தை உள்ளடக்கிய அமைச்சரவையின் முடிவுக்கமைய சிங்களத்தில் உரிய சித்தியடையாத தமிழ் அரசாங்க அலுவலகர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். சிறுகைத்தொழில் திணைக்களத்தில் சிருப்பராக இருந்த எஸ். பி. சுரேந்திரனும், நீர்ப்பாசன திணைக்களத்தில் எழுதுவினைஞராக இருந்த க. பத்மநாதனும் முதலில் வேலையிலிருந்து தூக்கியெறியப்பட்டனர்.

அதைக் கண்டித்து அன்றைய ஊர்காவற்றுறை பா. உ. வ. நவரத்தினம் அரசாங்க சேவை ஆணைக்குழுமீது பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தார். இப்பிரேரணை மார்ச் மாதம் விவாதத்திற் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

### விவாதமேடை

1969-3-11-ம் திகதி இப்பிரேரணை பற்றிப் பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்த உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் ''இப்பிரேரணையைத் தமிழ் எம். பி. க்கள் ஆதரிக்காவிட்டால் வேறு யார் ஆதரிப்பது?'' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

அன்று பாராளுமன்றத்தில் இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரு பெரும் செயலதிபர்களான திரு. அ. அமிர்தலிங்கமும் திரு. மு. சிவசிதம்பரமும் தலைவர்களான திரு, எஸ்.ஜே.வி. செல்வநாயகம், காலம்சென்ற ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோரும் இன்றைய கூட்டணி எம். பிக்களான திருவாளர்கள் கா. பொ. இரத்தினம், சி. கதிரவேற்பிள்ளை, வி.என். நவரத்தினம், செ. இராசதுரை, க. துரைரத்தினம் மற்றும் வவுனியா சிவசிதம்பரம் ஆகியோரும் இருந்தனர்.

ஆனல் நடந்தது என்ன? தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஆட்சிமன்றத்தை அலங்கரித்த இப்பெரியவர்கள் திரு. வ. நவரத்தினத்தின் பிரேரணையை வழிமொழியவும் மறுத்து பிரேரணை விவாதத்திற்கே வராமற் செய்துவிட்டனர். இவ்வளவிற்கும் எந்தஒரு தமிழ் அரசாங்க ஊழியனும் சிங்களம் படித்து இனத்தை விற்கக்கூடாது என்று 1965 மார்ச் 22-ம் திகதி வரை குரலெழுப்பியதுடன் தன் கையெழுத்தையும் இட்டு ஒவ்வொரு தமிழ் அரசாங்க ஊழியனுக்கும் தனிப்படக் கடிதமெழுதியவர் பெரியார் எஸ். ஜே. வி. செல்வநாயகம். இவ்வளவும் செய்து உரிமைக்குரலெழுப்பியவர்கள், தலைவர்களின் போர்முரசம் கேட்டுப் போராடப் புறப்பட்ட தமிழ் அரசாங்க ஊழியருக்குத் தார்மீக ஆதரவுதானும் கொடாமல் அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைக்குத் தப்பாமல் தாளம் போட்டதை மறந்துவிட்டால் நாம் ஆறுவது அறிவால் பெறும் பயன்தான் என்ன? தமிழர்கள் மனிதர்களா இல்லை மந்தைகளா?

இந்த நிலையிலே எப்படி முன்னுக்குப் பின் முரணை சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடுடையவர்கள் தலைமைதாங்கும் அமைப்பை நம்புவது? நம்பினல் நாடு விட்டு நாடுபோகும் தமிழர்களைப்போல வேலையிழந்து நடுத்தெருவில் நிற்கும் தமிழர்களைப்போல நாமும் அந்தரத்தில் தொங்கவேண்டித்தான் வருமோ என்ற அச்சம் என் போன்றவர்கள் மத்தியிலே நிலவுகின்றது. அதுமட்டுமல்ல தேர்தல் நெருங்கிவரும் இந்தநாளிலே ஆட்சிமன்றக் கதிரையிலே சென்றமர 'குஸ்தி'' போடும் தலைவர்களது தலைமைவிடுதலைவேண்டி நிற்கும் எமக்கு உகந்ததுதானு? கூட்டணித் தலைமையினரே இதற்குப் பதில் சொல்ல உங்களால் முடியுமா?

# வாக்குரிமையைப் பறித்த சட்டத்தை ஜி.ஜி. எதிர்த்தார்

— கொழும்பு சிவாநடேசன் —

அன்பின் இராசசிங்கம்,

நான் அன்று எழுதிய (11-4-77) பதில் மடல் முதற் பகுதி. இதை எனது இரண்டாம் பகுதியாகவும் தொகுப்புரையாகவும் கொள்ளுங்கள். மலையகத்தமிழர்பிரச்னை, சுதந்திரக்கட்சியின் தமிழர் மீது கொண்ட போக்கு ஆகியன நான் எடுத்த விடயங்கள்.

மலையகத்தமிழர் பிரச்னையில் நான் எனது இறுதிவடிவத்தை சமர்ப்பிக்கின்றேன். எனது கருத்தில்,

1. இலங்கைபிரஜாஉரிமைச் சட்டம் 1948ஆம் ஆண்டின் 18ம் இலக்கச்சட்டமே மலையக மக்களின் குடியுரிமை பறித்த சட்டம். இது அமரர் ஜி. ஜி. எதிர்த்தார் என்றும்

2. இந்தியா - பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டம், குடியுரிமை வழங்கும் சட்டம் என்றும் 1948ம் ஆண்டு டிசம்பர் மாதம் பாராளுமன்றத்திற்கு வந்தது என்றும் ஜி. ஜி. ஆதரித்தார் என்றும் கூறி வாதம் புரிந்தேன்.

இந்தியா-பாகிஸ்தானிய சட்டம் பல தவறான வழிகளில் இழுத்துச் செல்லப் பட்டதால் பெரும்பாலான மக்கள் பிரஜா உரிமை கிடைக்கவில்லைஎன்றும் குறிப்பிட்டேன். குறிப்பாக பகிஷ்கரிப்பு காரணமாக பலர் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டதை கூறினேன். அதை மீண்டும் வலியுறுத்துமுகமாக எனக்கு வீரகேசரி இதழில் (16-4-1977) ஐ. தொ. கா. உபதலைவர் திரு வி. பி. கணேசன் கூறியதை இங்குதருவதன் மூலம் எனது வாதத்துக்கு வலுவூட்டுகின்றேன்.

திரு வி. பி. கணேசன் கூறியதாவது; ''1948இல் இந்திய - பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது தோட்டங்களில்ஒருதொழிற் சங்கம் இருந்தது. நாட்டின் பொருளாதாரமான தேயிலை றப்பர் தோட்டங்களில் தொழிலாளர்கள் இலங்கை இந்தியர் காங்கிரஸில் அங்கத்தவராக இருந்தனர். அச் சமயத்தில் வேலை நிறுத்தம் செய்திருப்பின் இலங்கைப் பொருளாதாரத்தை 10நாட்களில் ஆட்டிவைத்திருக்க முடியும். ஆனல் அப்படிச் செய்யவில்லை.

அப்போதைய எம். பி.க்கள்சத்தியாக்கிரகம்,உண்ணாவிரதம் ஆகியவற்றினை மேற்கொண்டனர். அதன் மூலம் நன்மை கிடைப்பதற்குபதில் தீமையே ஏற்பட்டது. பிரஜா உரிமைச் சட்டம் அமுலாக்கப்பட்டு பரம்பரை பரம்பரையாக இந் நாட்டில் வாழ்ந்த நாங்கள் நாடற்றவர்களாக்கப்பட்டோம். அத்தோடு பிரஜாஉரிமை கோரி மனுப்போட வேண்டாம் என அறிவித்துவிட்டுக்கடைசித் தருவாயில் மனுப் போடும்படி கூறி மக்களைக் குழப்பியடித்து அதன்மூலம் தகுதிவாய்ந்த பலருக்கு பிரஜா உரிமை கிடைக்கமுடியாமல் செய்து விட்டனர்'' இவ்வாறு எழுதினர் தோழர் வி. பி. கணேசன்.

நண்பரே எனது வாதம் ஆணித்தரமாகஇருக்கும்போது என்னை எதற்காக உண்மை உணர்ந்து எழுதுமாறு கோரியதோ தெரியவில்லை?

உங்களுக்கு (ஈழநாடு) 25-3-77 இதழில் 'சுந்தரர்' அளித்த பதிலில் ''1948ம் ஆண்டில் நான் மந்திரியாய் இருந்தபோது இலங்கையில் வசிக்கும் இந்திய பாகிஸ்தான் மக்களுக்கு பிரஜா உரிமை கொடுக்கும் சட்டம் கொண்டு வந்தபொழுது அச்சட்டத்தை மந்திரியாக இருந்தபோதிலும் ஆமோதிக்காதபடியால்என்னை மந்திரிசபையிலிருந்து விலக்கினர்''எனக்கூறியுள்ளார்.

சுந்தரரின் மேற்கூறும் கூற்று இந்தியா- பாகிஸ்தானிய பிரஜா உரிமைச்சட்டம் வரும் முன்பே வாக்குரிமை பறிக்கப்பட்டதை காட்டுகின்றதல்லவா? அதுதான் திரு. ஜி.ஜி. எதிர்த்த இலங்கைக் குடிஉரிமைச்சட்டம் (1948ம் ஆண்டின் 18ம் இலக்கசட்டம் அச்சட்டம் வரும்போது தமிழ்க் காங்கிரஸ் அரசுடன் சேரவில்லை. ''சுந்தரலிங்கம், சிற்றம்பலம்'' ஆகியோர் மந்திரிசபையில் இருந்தனர். 20-10-62 இல் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் கூற்றும் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம்தான் எல்லாக் குறும்புகளையும் செய்ததை காட்டியுள்ளார். (28-3-77 ஈழநாடு)

சுந்தரருக்கு நீங்கள் 14-3-77இல் கூறியதை ஞாபகமூட்டுகின்றேன். ''நான் எவரையும் ஏமாற்றும் நோக்கத்துடன் அரசியல் பேசுபவனுமல்ல, எழுதுபவனுமல்ல. 1947 ம் ஆண்டில் வேண்டுமானல் சனங்கள் ஏமாற்றலாம். ஆனல் இன்றையகாலத்தில் மக்கள் எம்மிலும் பார்க்க அரசியல் விழிப்புணர்ச்சி அறிவும் கூடியவர்களாக உள்ளனர். எனவே மக்களை எவருமே ஏமாற்ற முடியாது'' இவ்வாறு கூறியதை நான் அன்றைய கட்டத்தில் மலையகத் தமிழர் பிரச்னையிலும் ஒப்புநோக்கினல் என்ன? அன்று சனங்களிடம் அமரர் ஜி.ஜி. யின் மீது மாசுகற்பிக்க நடந்த பிரசாரம் தவறானமுறையில் எடுபட்டுவிட்டது என்பதே எனது வாதம் உங்களை அறியாமலே நான், உங்களுடன் வாதம்செய்யும்நிலை அரசியல் விழிப்புணர்ச்சி தான். ணக்கம். விடை பெறுகின்றேன்.

# அடையாள அட்டை இல்லாதவர்கள் கூப்பன்பெறுவதில் கஷ்டம்!

வண்ணார்பண்ணை, புதன்,

அடையாள அட்டை பெறாதவர்கள் தமது அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களைப் பெறமுடியாத நிலை வடபகுதியில் ஏற்பட்டுள்ளது. இதனால் பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அடையாள அட்டை இல்லாதவர்கள் இந்த அட்டை பெற விண்ணப்பித்ததற்கான ஆதாரம் அல்லது சத்தியக்கடதாசி கொடுத்துக் கிராமசேவையாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே தமது அரிசிப்பங்கீட்டுப் புத்தகத்தைப் பெற வாய்ப்பு ஏற்படும்.

இந்தநிலையில் ஆள் அடையாள அட்டை இதுவரை கிடைக்காத பாமர மக்களுக்கு அரிசிப் புத்தகம் பெறுவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. அடையாள அட்டை பெற விண்ணப்பிக்காதவர்கள் விண்ணப்பித்த பின்னரே அரிசிப் பங்கீட்டுப் புத்தங்களைப் பெறமுடியும். இந்த நிலை பொதுமக்களுக்கு மட்டுமல்ல, கிராமசேவையாளருக்கும் பெரும் தலையிடியாக இருந்து வருவதாகத் தெரிகிறது. இது விஷயத்தில் கிராமசேவையாளருக்கும், பொதுமக்களுக்குமிடையில் மனஸ்தாபம் ஏற்படும் நிலையும் சில இடங்களில் உருவாகிவருவதாக கிராம சேவையாளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

## 3000 ருத்தல் மாட்டிறைச்சி கடத்தினராம்

புத்தளம், புதன்

மூவாயிரம் ருத்தல் மாட்டிறைச்சி புத்தளம் நீதிமன்றத்தின் உத்தரவின்மூலம் அழிக்கப்பட்டது.

புத்தளம் பொலிசார் தமக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றினையடுத்து புத்தளத்தில் இருந்து கொழும்பு சென்ற லொறி ஒன்றைத் தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது சாக்குகளில் கட்டப்பட்டிருந்த மேற்படி 3000 ருத்தல் மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மீராலெப்பை முத்தாலிப், பி. வடிவேலு என்ற இரு புத்தளம் வாசிகளும், அப்துல் அடத் என்ற கொச்சிக்கடை வாசியும் புத்தளம் நீதவானின் உத்தரவின்பேரில் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

லொறி நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

மாட்டிறைச்சி3000 ருத்தலையும் அழிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (உ)

## நீர்வையில் கந்தபுராண விரிவுரை

யாழ்ப்பாணம், வியா.

நீர்வேலிக் கந்தசுவாமி கோவிலில் தினமும் இரவு 9 மணி முதல் கந்தபுராண விரிவுரை நடைபெற்றுவருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை உற்சவாரம்பம் தொடக்கம்தேர்த் திருவிழாவான எதிர்வரும் 2-ம் திகதி வரை பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா இவ்விரிவுரையை நிகழ்த்திவருகிறார். 'தாரகன் வதம்' என்னும் பொருள் பற்றிய விரிவுரை நிகழும். (அ)

......

## நிர்வாகிகள்

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க 11 ஆவது ஆண்டு பொதுக் கூட்டம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெற்றசமயம் பின்வருவோர் புதியநிர்வாகிகளாக தெரிவு செய்யபட்டனர்.

தலைவர் திரு.ச.ஆறுமுகநாதன். உபதலைவர் திரு.வி. ஈஸ்வரகுமார். இளைக்காரியதரிசிகள் திரு.சொ. கணேஸ்வரன் கு.ஸ்கந்தராசா 9பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (உ)

## சுங்க வருமானம் ரூ. 30 கோடி 25 லட்சம்

கொழும்பு, புதன்

சுங்கத்திர்வை மூலம் 30 கோடி 25 லட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளது. இது சென்ற ஆண்டிலும் பார்க்க 6 கோடி 25 லட்சம் ரூபா அதிகமானதாகும்.

இறக்குமதி, ஏற்றுமதித் தீர்வைகள் மூலம் இத்தொகை வசூலிக்கப்பட்டது. (உ)

கொழும்பு

## மேதின ஊர்வலங்களில் 2500 பஸ்கள்!

கொழும்பு, புதன்

இவ்வாண்டு 2500 இ. போ. ச. பஸ்கள் மேதின ஊர்வலத்தில் கலந்துகொள்ளும்.

நான்கு பெரிய தொழிற்சங்கங்களின் மேதின ஊர்வலங்களில் இப்பஸ்கள் பங்குபெறும்.

மேற்படி நான்கு தொழிற்சங்கங்களும் இ. போ. ச. தலைவர் திரு. ஜெக் கொத்தலாவலையிடம் தமது ஊர்வலங்களுக்கு 3,000பஸ்கள் தேவைப்படுகின்றது என்று கோரியிருந்தன.

ஆனால் 2500 பஸ்களை மட்டுமே தந்துதவ முடியுமென்று திரு. கொத்தலாவலை அத் தொழிற்சங்கங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இ. போ. ச. ஒருமைல்செல்வதற்கு 50 சதவீதம் பணம் அறவிடும்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது மேதின ஊர்வலத்தில் ஒருலட்சம் ஆதரவாளர்கள் வெளியிடங்களிலிருந்து வந்து கலந்துகொள்வரென எதிர்பார்க்கிறது. (உ)

## 'சிந்தனைகள்'

கொழும்பு, செவ்வாய்

இளங்கலைஞர் முன்னேற்ற மன்றத்தினர் அளிக்கும் 'சிந்தனைகள்' என்ற நாடகம் இம் மாதம் 23-ம் திகதி பாலை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் மேடையேறுகிறது. நடிகர் ஒன்றியம் நாடக ரசிகர் அவைக்காக இது மேடையேறுகிறது. (அ)

## கொழும்பில் உயர் அதிகாரிகள் மாநாடு

கொழும்பு, புதன்

அரசாங்க அதிபர்கள் அரசியல் அதிகாரிகள் கலந்துகொள்ளும் மாநாடு ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

நாட்டின் அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து இம்மாநாட்டில் பிரதானமாக ஆராயப்படும். (உ)

## அம்பன் ஆஸ்பத்திரிவார்டுகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன

நெல்லியடி, புதன்

வார்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்குப் பல வாரங்களாக உணவு வழங்கப்படாமையினால் நோயாளர்கள் வைத்தியசாலையைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

அம்பன் அரசினர் வைத்தியசாலையில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

வார்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களில் குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள் இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பின்தங்கிய பகுதியில் உள்ள இவ்வைத்தியசாலையில் இந்நிலைமை தொடர்ந்து நீடிப்பதனால் அதிக பணம் செலவழித்து வெளியூர் வைத்தியசாலைகளுக்குச் செல்லவேண்டிய இக்கட்டான நிலைமை இப்பகுதி நோயாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

உணவு விநியோகம் ஸ்தம்பிதம் அடைந்துள்ள இவ்வைத்தியசாலை வார்டுகள் நோயாளர்களின்றி தற்போது வெறிச்சோடிக்கிடக்கின்றன. இவ்வைத்தியசாலையின் நிலைமை குறித்து குடத்தனைக் கிராமாட்சி மன்றத் தலைவர் திரு. டை. துரையப்பா, அம்பன் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. கே. ஐயாத்துரை ஆகியோர் சுகாதார அமைச்சரிடம் முறையிட்டுள்ளனர். (அ)

## தங்கச் சங்கிலிக்காக உயிர்விட்ட யுவதி

மாவிட்டபுரம், புதன்

தங்கச்சங்கிலி வாங்கித் தராது தந்தைகாலம் கடத்தி வந்தாராம். இதனால் மனமுடைந்த 19 வயது யுவதி கிருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்துகொண்டார்..

அளவெட்டியைச் சேர்ந்த வன்னியசிங்கம் மைனாவதி என்பவரே இவ்வாறு தற்கொலைசெய்துகொண்டவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்திய சமயம் காலமானவரின் தந்தை கந்தர் வன்னியசிங்கம், தாயார் நாகம்மா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

காலமானவர் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை வாங்கி அடைவுவைத்துவிட்ட தந்தை பின்னர் வேறு ஒரு சங்கிலி வாங்கித் தருவதாகப் பல முறை கூறிக் காலம் கடத்திவந்ததாகவும் சங்கிலி பற்றிப் பிரஸ்தாபித்து நெடுகவும் கவலையுடன் இருந்து வந்த காலமானவர் சம்பவ தினம் கிருமிநாசினி அருந்தியதையடுத்து தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு விரயப்பட்டு அங்குகாலமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்தியஅதிகாரி திரு. பி. சுபானந்தன் கிருமிநாசினி அருந்தியதால் ஏற்பட்ட மரணம் எனத் தமது சாட்சியத்தில் கூறினர். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)



ராஜா
(யாழ். நகர்)
ஏ.வி.எம்.ராஜன் - சாரதா
முத்துராமன் - நாகேஷ்
[தினசரி 4 காட்சிகள்]
துலாபாரம்
(தமிழ் - புதிய பிரதி)

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஃ சிவாஜி (இருவேடம்)
ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன்கலர்)

11-வது வெற்றி வாரம்!
மனோகரா
(யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

REGAL
(JAFFNA)
Daily at 4-45, 7-00 & 9-30 p.m. only
For All Good Children From 8 to 80!
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)

RIO
(Jaffna)
Daily 4 Shows
SAMSON THE MIGHTY
Color — Scope

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
[யாழ். நகர்]
நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 சிவாஜி, ஜெயலலிதா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
தெய்வமகன்
22-4-77 முதல்
சொர்க்கத்தில் திருமணம்

ராணி
[யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஏ.வி.எம்.ராஜன்-காஞ்சனா
நடித்த
வீர அபிமன்யு
29-4-77 முதல்
புரட்சித் தலைவரின் மகத்தானபடைப்பு
நாளை நமதே

வின்ஸர்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — பானுமதி
நடித்த
மதுரை வீரன் (புதிய பிரதி)
22—4—77 முதல்
சிவாஜி கணேசன் (இரு வேடங்களில்)
நடித்த
மனிதனும் தெய்வமாகலாம்
(கலர்)

# இரத்தினக்கல் விற்பனையில் 53 லட்சம் வருமானம்

கொழும்பு, புதன்

ஜப்பானில் இரத்தினக் கற்களை விற்பனை செய்ததன்மூலம் இலங்கை 53லட்சம்ரூபாவைச் சம்பாதித்துள்ளது.

சென்றமாதம் ஜப்பானில் நடைபெற்ற இரத்தினக்கல் விற்பனைக் கண்காட்சியிலேயே மேற்கூறிய தொகை சம்பாதிக்கப்பட்டது.

இலங்கை இரத்தினக்கல் கூட்டுத்தாபனமும் இலங்கை வர்த்தக சம்மேளனமும் இணைந்து நடத்திய இந்த விற்பனைக்கண்காட்சியில் பல்வேறு இரத்தினக்கற்களை ஜப்பானிய மக்கள் ஒரே தடவையில் பார்த்து மகிழ்ந்தனரென்று தெரிவிக்கப்பட்டது. இக்கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த இரத்தினக் கற்கள் தொலைக் காட்சியிலும் காண்பிக்கப்பட்டன. (இ)

## பதவிஉயர்வு

சங்கானை, புதன்

சங்கானையைச் சேர்ந்தவரும் மாத்தளை சுகாதார காரியாலயத்தில் கடமை யாற்றுபவருமான திரு. ரி. எஸ். இராசேந்திரம் வைத்திய அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுள்ளார்

இலங்கையில் பல இடங்களிலும் பணிபுரிந்த இவர் இருபது வருடசேவையின் பின் உதவி வைத்திய அதிகாரிகள் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் என கணிக்கப் படுவார்கள் என்ற அரசினர் திட்டத்திற்கமையவே திரு. இராசேந்திரம் பதவிஉயர்வு பெற்றுள்ளார். (உ)

## வீரசைவ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திக் கௌரவிக்கப்பட்டது.

இதையடுத்து குருமகா சந்நிதானம் ரதபவனியாகவும், பூம்பல்லக்கு ஊர்வலமாகவும், பட்டுக்கம்பளநடைபவனியாகவும் விழா மண்டபம்வரை அழைத்து வரப்பட்டார்.

நாகசுர தவில் கச்சேரிகள் குதிரையாட்டம், கரகம், காவடியாட்டம், கோலாட்டம் பஜனைகள் சகிதம் இடம் பெற்ற இவ்வூர்வலத்தையடுத்து ஆரம்பமான விழாவிற்கு தலைமைவகித்துப் பேசுகையில் திரு. ச. த. சின்னத்துரை மேலும் கூறியதாவது:

'இலங்கையில் வீரசைவமதம் வளர்ச்சியடைவதற்காகப் பணிபுரிந்து வருபவர்களில் இன்று வைரவிழாக்காணும் ஐயம்பிள்ளைக் குருக்களும் மிக முக்கியமானவர். நெடுங்காலமாக இச்சமயவளர்ச்சியில் தனித்து நின்று அயராது உழைத்துசிவப்பணியாற்றி வரும் அவரது சேவை எம் மக்களின் ஆத்மீக வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததொன்றாக விளங்குகிறது. பாரத நாட்டிலே உபஜனாதிபதியாக விளங்கும் திரு. பி. டி. ஜெட்டி, திருமுருக கிருபானந்த வாரியார், கும்பகோணம் ஸ்ரீ சாரங்கதேசி கேந்திரசுவாமிகள் போன்றோர் இச்சமய வளர்ச்சிக்காக ஆற்றும்சேவை போன்று இவர் ஈழத்தில் ஆற்றிவருகிறார். இவர்போன்ற இன்னும் பலர் மேலும் இச்சமய வளர்ச்சிக்காக தொண்டாற்ற முன்வந்தால்வீரசைவ மதம் இங்கு நன்கு வளர முடியும்' என்றார்.

மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

இவ்விழாவையொட்டி மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-நிர்மலா
வீட்டுக்கு வந்த மருமகள்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30 7-00, 9-30
Man at The Top

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 4-30, 7-00, 9-30
OUT OF SEASON
(Color - Adults only)
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## மீண்டும்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மேதின ஊர்வலத்திலும்கலந்து கொள்வர் எனக் கட்சியின் மேலிடத்தால் எதிர்பார்க்கப்படுகிறது.

சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே திரு. நாணயக்காரா கட்சியில் மீண்டும் சேர்வதானல் அனுமதி வழங்கப்படும் என்று கட்சிப்பேச்சாளர் ஒருவர் சொன்னார். (உ)

## ஆசிரிய நியமனம பற்றிப் பண்டிதர்

யாழ்ப்பாணம், வியா

ஆசிரிய நியமனங்கள் தகுதி அடிப்படையிலேயே வழங்கப்படும் என்று கல்வி இலாகா அதிகாரிகள் தமக்குத் தெரிவித்துள்ளதாக ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்தார்.

''ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் தேவையற்ற முறையில் அலைந்து தமது சக்திகளை விண்விரயம் செய்ய வேண்டாம். தகுதிஅடிப்படையில் நியமனங்கள் கிடைக்கும். கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர்களுக்கான நியமனங்கள் அடுத்தமாத முடிவில் கொடுக்கப்படவிருக்கின்றன'' என்றும் அவர் தெரிவித்தார். (வண்-நிரு)

## ஒருசில...

8-ம் பக்கத் தொடர்ச்சி)

களை ஒருசில தலைவர்கள் தமது சுயதேவைகளை நிறைவேற்றுவதற்காக மீண்டும் கட்சி அடிப்படையில் பிரிக்கப்பார்க்கிறார்கள். இத்தகையவர்களின் பிரசாரங்களுக்குத் தமிழ்மக்கள் செவிசாய்க்கக்கூடாது'.

''படித்த இளைஞர்களாகிய நாம் விரும்பியிருந்தால் நல்ல உத்தியோகங்களைப் பார்த்து சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கலாம். அதனை விடுத்து எமது இளமைக் காலத்தைச் சிறையிலும், துன்பம்தரும் இடங்களிலும் கழித்தோம் என்றால் இந்த நாட்டிலே வாழ்கின்ற - வாழப் போகின்ற தமிழ் மக்கள் அடிமை இனமாக வாழாது சுதந்திர ஈழத்தில் சிங்கள மக்கள் எவ்விதம் சுதந்திரமாக இறைமையுடையவர்களாக இலங்கையில் வாழ்கின்றனரோ அதுபோல் தமிழ் மக்களும் வாழவேண்டும் என்ற தாகத்தாலேயே ஆகும்.

இன்று உலகில் 5 கோடிக்கு மேல் தமிழர்கள் வாழ்கின்றனர். ஆனால் அவர்களுக்கு என்று ஒரு நாடு இல்லை, வாழும் இடங்களில் எல்லாம் அவர்கள் அதிகாரம் அற்றவர்களாகவே வாழ்கின்றனர். எனவே தமிழர்களுக்கு என்று ஒரு நாடுவேண்டும். அது முதலில் தமிழர்களின் பூர்வீக நாடான இலங்கையில் தமிழ் ஈழம் மலர, ஒவ்வொரு தமிழ் இளைஞனும் தன்னைத் தியாகம் செய்யத் தயாராகிக்கொள்ள வேண்டும்'' என்றார்.

(கல்வி. நி-உ)

## இணைப்பு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அதற்கான அடிப்படை அம்சங்கள்பற்றி கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலமும் கூட்டணிப் பிரமுகர்கள் திரு. வி, தர்மலிங்கம், திரு. மு. ஆலாலசுந்தரமும் கலந்தாலோசனை செய்தனர்.

இந்த அம்சங்கள்பற்றி நகல் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டது. இது இருதரப்பினரும் பரிசீலனைசெய்தபின் இறுதி வடிவம்பெற்றுச் செயல்படுத்தப்படும்.

# சுருட்டுத் தொழிலாளர் கூட்டணியுடன் மேதினம்

யாழ்ப்பாணம், விழா

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் மேதினக் கூட்டம் தனிப்பட்ட முறையில் நடைபெறமாட்டாது என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியும். அதன் தொழிற்சங்கங்களும் சேர்ந்து நடத்தும் மேதினப் பெருவிழாவில் கலந்து கொள்ளும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூரில் மேற்படி சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இதுசம்பந்தமான தீர்மானம் எடுக்கப்பட்டது. சுருட்டுத் தொழிலாளர்கள் மருதனாமடச் சந்தியிலிருந்து மேமாதம் 1ம் திகதி பிற்பகல் நடைபெறும் ஊர்வலத்தில் பங்கு பற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசும்பொழுது ''இந்த நாட்டிலேயுள்ள தொழிலாளர்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமானல் சக்தியுள்ள பெரிய ஸ்தாபனத்தின் உதவி வேண்டும். அத்தகைய சக்தியுள்ள பெரிய ஸ்தாபனம் தமிழர்மத்தியில் தமிழர் விடுதலைக் கூட்டணியாகவே இருக்கிறது. இத்தகைய பலத்துடன் வருங்காலத்தில் இதன் தலைமையில் இயங்குகின்ற தொழிற்சங்கங்களுடன்சேர்ந்து ஒன்றுபட்டுப் போராடுவதே எமது விடுதலைக்கு உகந்தவழியாகும்'' என்றார்.

'தொழிலாளர்களின் சிறு, சிறு பிரச்னைகளைவிடத் தொழிலாளரின் முக்கியமான அரசியல் உரிமைகளைக்கூட இந்த அரசாங்கம் பறித்துவிட்டது. தமிழனுக்கு ஒருநாடு வேண்டுமென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் போராட்டத்தில் முக்கிய பங்காளிகளாகத் தொழிலாளர்கள் திகழவேண்டும் என்றும் திரு. துரைராஜங்கம்சி குறிப்பிட்டார். (ஆ)

## பச்சைப்புழுவை அழிக்க கங்கணம்

நல்லூர், புதன்

கடந்த சில வாரங்களாக விவசாயப்பயிர்களின் இலை, பூ, காய்போன்றவற்றை அரித்துச் சேதப்படுத்திவரும் புது இன பச்சைப்புழுவை அழிப்பதற்கு ஏதுவான விவசாயக்கிருமிநாசினியைத்தெரிவு செய்யும்முயற்சியில் கொழும்பு சி.ஐ.ஏ.எஸ். லிமிட்டெட்டை சேர்ந்த திரு. எட்வேட் இரத்தினமும் யாழ்ப்பாணம் ரோமு லிமிட்டெட்டைச் சேர்ந்த திரு. கே. பொன்னையாவும் கடந்த சனி ஞாயிறுதினங்களில்யாழ்ப்பாணத்தின பலபகுதிகளில் பலரகமான விவசாய கிருமிநாசினிகளை விவசாயப் பயிர்களுக்கு பரீ சார்த்தமாகவிசிறி அதன் பலாபலனைப் பார்த்தனர். பச்சைப்புழுவை அழிப்பதற்கு உகந்த விவசாயக் கிருமிநாசினிக் கலவையைக் கண்டுபிடிக்க ஆவன செய்துவருகிறார்கள். (அ)

# ஈழநாடு

The EELANADU


## "ஒருசில தலைவர்களால் இனம் பிளவுபடக்கூடாது"

— பொன். சத்திய சீலன்

வவுனிக்குளம், புதன்

"எம்மிடையே ஏற்படுகின்ற எந்தப் பிணக்குகளும் எம் இலட்சியத்தை அடைவதற்கு இடைஞ்சலாக அமையக் கூடாது. இவ்விடயத்தில் இளைஞர்கள் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். எந்தக் கருத்து வேறுபாடும் தங்கள் பாதைக்குத் தடைபோட அவர்கள் அனுமதிக்கக்கூடாது".

இவ்வாறு வவுனிக்குளம், பனங்காமத்தில் நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவைக்கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய பொன். சத்தியசீலன் கூறினர்.

திரு. கந்தையா தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'1972-ம் ஆண்டில் தமிழர் கூட்டணி என்றவிடுதலை அமைப்பு தமிழ்மக்களின் ஏகோபித்த அரசியல் ஸ்தாபனமாக உருவாகிய பின்பும் இன்னும் சிலர் தமிழரசு — தமிழ்க் காங்கிரஸ் என்று சுயநலநோக்கில் சிந்திக்கின்றனர். இத்தகைய சிந்தனைகள் தனிமனித இலாபம் கொண்டவையாகவே கருதப்படவேண்டும். இதற்குத் தமிழ் இளைஞர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டும்.

'1948-ம் ஆண்டில் இருந்து தமிழரசு — தமிழ்க்காங்கிரஸ் என்று கட்சி அடிப்படையில் போராட்டம் நடத்திவந்த தமிழ்மக்கள் இன்று தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பில் தமிழ்ஈழம் அமைப்பதே தமது நோக்கமாகக் கொண்டுவிட்டார்கள். அவர்

(7-ம் பக்கம் பார்க்க)

## யாழ். வளாகத்தில் இம்முறை 280 மாணவர் அனுமதி

### விஞ்ஞானபீடம்-166

### கலைப்பீடம்-115

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்தில் 77-78-ம் ஆண்டுக்கான கல்வி ஆண்டில் 280 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் எனத் தெரிகிறது.

விஞ்ஞான பீடத்திற்கு 166 மாணவர்களும் மனிதப் பண்பியல் பீடத்திற்கு 115 மாணவர்களும் அனுமதிபெறுவர்.

விஞ்ஞான பீடத்தில் கணித, புள்ளிவிபரவியல் துறைக்கு 101 மாணவரும் உயிரியல் துறைக்கு 24 பேரும் பௌதிகவியல் துறைக்கு 41 பேரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மனிதப் பண்பியல் பீடத்தில் 37பேர் வர்த்தகத்துறைக்கும் 25பேர் விசேட கலைப் பிரிவு பாடங்களுக்கும் அனுமதிக்கப்படுவர்.

### ஜூன் இறுதியில் வகுப்புகள் ஆரம்பம்

யாழ் வளாகத்தின் 77-78-ம் கல்வி ஆண்டின் புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் இவ்வருடம் ஜூன் மாத இறுதியில் ஆரம்பமாகும் என்று தெரியவருகிறது.

சகல வளாகங்களிலும் புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் திகதி குறித்து நாளை கொழும்பில் நடைபெறும் வளாகத்தலைவர்களின் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும். (இ)

## வெளிநாட்டில் வேலைகோரி 50 ஆயிரம்பேர் விண்ணப்பம்

கொழும்பு, புதன்

வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு 50,000பேர் வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். நாளாந்தம் 100பேர் வெளிநாட்டில் வேலைவாய்ப்புக்கோரி விண்ணப்பித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தொழில்நுட்பத் துறைக்கே பெரும்பாலானோர் விண்ணப்பித்துள்ளனர்.

அரசின் உதவியுடன் இதுவரை 0 இலங்கையர் ஈராக்கில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். (உ-இ)

## "இளைஞர்களுக்கெதிராக போட்டிக்கு நிறுத்தேன்"

### சுந்தரர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

"காங்கேசன்துறை தொகுதியில் மாவை சேனாதிராசா போட்டியிடும் பட்சத்தில் அவருக்கு எதிராக ஈழத்தமிழ் தொண்டர்சபை சார்பில் அபேட்சகர்களை நிறுத்தமாட்டேன் அத்துடன் அவருக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வேன்"

ஈழத்தமிழ் தொண்டர் சபை அமைப்பாளர் திரு. சி. சுந்தரலிங்கம் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. சுந்தரலிங்கம் மேலும் கூறியதாவது: கவிஞர் காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன் ஆகியோர் போட்டியிடும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராகவும் அபேட்சகர்களை நிறுத்தமாட்டேன்.

சிறைமீண்ட இளைஞர்கள் வேறுயாருமே கூட்டணிசார்பில போட்டியிட்டாலும், அவர்களுக்கு எதிராகவும் அபேட்சகர்களை நிறுத்தமாட்டேன்.

தமிழ் ஈழத் தொண்டர் சபையின் தேர்தல் ஆலோசனை மாநாடு இம்மாதம் 23-ம்தேதி நல்லூரில் நடைபெறும் அப்பொழுது மற்றும்தொகுதிகளுக்கான அபேட்சகர்கள் பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வாசுதேவ விவகாரம்

## மீண்டும் சேர்ப்பதா? கட்சி மேலிடம் ஆராயும்

கொழும்பு, புதன்

சமசமாஜக்கட்சியின் உயர்பீடம் கிரியெல்ல எம். பி. திரு. வாசுதேவ நாணயக்காரவையும் மற்றும் இரு மத்தியகுழு உறுப்பினர்களையும் மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்வதா என்பதுகுறித்து ஆராயவிருக்கிறது.

இதுதொடர்பாக திரு. நாணயக்காரா சமசமாஜக்கட்சித் தலைவர் கலாநிதி என். எம். பெரேராவை திங்கட்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து மேற்படி நிலை ஏற்பட்டுள்ளது.

திரு. நாணயக்காராவுக்கும் மேற்படி இரு உறுப்பினர்களுக்கும் கட்சியில் சேர்த்துக்கொள்ளப்படும் பட்சத்தில் திரு. நாணயக்காராவும் அவரது கோஷ்டியினரும் சமசமாஜக் கட்சியின்

(7-ம் பக்கம் பார்க்க)

### மருந்தாள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விருல்தெரிவிக்கப்பட்ட சிபார்சுக்கமைய மருத்துவ உதவியாளர்களுக்கு 1975 ஏப்ரல் 1ம் திகதி முதல் புதிய சம்பளத்திட்டத்தை அமுல்நடத்த சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்திருப்பது தெரிந்ததே.

இன்று சுகாதார அமைச்சில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் மருந்தக உதவியாளர்கள் சங்கப்பிரதிநிதிகள் கலந்துகொண்டனர் சட்டப்படி வேலைஇயக்கத்தை கைவிடுமாறு தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகரா கோரிக்கை விடுத்தார். புதிய சம்பளத்திட்டம் அமுலுக்கு வரும்வரை வழமைபோல் கடமைசெய்யுமாறு வைத்திய உதவியாளர்களிடம் அவர் கேட்டுக்கொண்டார். (ஆ)

### சர்வதேச..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றாலும் இந்த நகல் தீர்மானம் இருபகுதியினரும் ஆராய்ந்த பின்னர் இறுதிவடிவம் பெறும் டியாகோ கார்ஸியா இந்துமகா சமுத்திர அமைதிப் பிரதேசம் போன்ற சர்வதேசப் பிரச்னைகளை உள்ளடக்கிய தீர்மானம் ஒன்று தமிழர் விடுதலைக் கூட்டணி மேதினக் கூட்டத்திற்கு வருவது இதுவே முதல் தடவையென்று கருதப்படுகிறது.

### முகாமையாளர்

கல்வியங்காடு, புதன்

இலங்கைக் காப்புறுதிக்கூட்டுஸ்தாபன யாழ்ப்பாணக்கிளைக்கு உதவிக் கிளை முகாமையாளராக திரு. ஏ. சி. ஜே. பெர்னண்டோ நியமிக்கப் பட்டுள்ளார். (இ)

## ஆயுர்வேத வைத்தியர்களுக்கு அபின்--கஞ்சா கிடைக்கும்

### பாதுகாப்பு-சுகாதார அமைச்சு திட்டம்

கொழும்பு, புதன்

அபின், கஞ்சா ஆகியன ஆயுர்வேத வைத்தியர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

இவற்றை இறக்குமதிசெய்து ஆயுர்வேத வைத்தியர்களின் மருந்துத் தேவைக்காக வழங்கும் புதிய திட்டம் ஒன்றை பாதுகாப்பு அமைச்சும் சுகாதார அமைச்சும் தீட்டியுள்ளன.

சீரகம், வெள்ளைப்பூடு, கொட்டை முந்திரிகை வற்றல் ஆகியன கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனத்தின் மூலம் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

இவற்றினால் 10ஆயிரம் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்கள் பயனடைவர். (இ)

## செல்வா வாழ்க்கையின் புகைப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம், வியா,

மூதறிஞர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் வாழ்க்கையில் சில காட்சிகளும், அன்றுமுதல் இன்றுவரை மொழியுரிமைப் போராட்டத்தில் பங்குகொண்ட பெரியார்கள், தியாகிகள், தொண்டர்களின் புகைப்படக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நாளை மறுதினம் 23ம் திகதி முதல் மே 1ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

ஸ்ரீதர் படமாளிகைக்கு அருகில் கலைஞானி கண்காட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ள கண்காட்சியை 23-ம் திகதி காலை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் குத்துவிளக்கேற்ற, சுயாட்சிக்கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினம் ஆரம்பித்து வைப்பார்.

திரு. செல்வநாயகத்தை பார்வையிடுவதற்காக முண்டியடித்துக் கொண்டு ஆஸ்பத்திரி செல்பவர்களால் ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கும், நோயாளர்களுக்கும் திரு. செல்வாவுக்கும் கூட அமைதியைக் குழப்புவதாக இருக்கும் என்ற காரணத்தால், அவர் முகம் காண விரும்புபவர்களுக்கு இந்த இலவசக்கண்காட்சியை ஒழுங்கு செய்திருப்பதாக அமைப்பாளர் திரு. வ. திருச்செல்வம் விடுத்துள்ள அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளார். (ஆ)

## 53 லஞ்ச வழக்குகள்

கொழும்பு, புதன்

கடந்த நான்கு மாதங்களில் 53 லஞ்ச வழக்குகளை லஞ்ச விசாரணை நீதிமன்றம் விசாரணை செய்துள்ளது.

இவ்வழக்குகளில் பல்வேறு துறைப்பட்டவர்கள்மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

## கீரிமலை உற்சவம்

மாவிட்டபுரம், புதன்

சரித்திரப் பிரசித்தி பெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய தேவி மகோற்சவம் நாளை 22-ம் திகதி கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகஇருக்கிறது.

இவ்வுற்சவம் தொடர்ந்து 10தினங்கள் இடம்பெற்று மே மாதம் 2-ம்திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெற உள்ளது. தினமும் சிறப்பு நிகழ்ச்சிகள் பல இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. (உ)

## மாளிகாவத்தையில் கோஷ்டி மோதல்

### ஒருவர் பலி; நிலைமையை ஆராய உயர் பொலிஸ் குழு நியமனம்

கொழும்பு, வியாழன்

மாளிகாவத்தையில் நேற்றுப் பிற்பகல் 4மணியளவில் நடந்த கோஷ்டி தாக்குதல் சம்பவத்தில் ஒருவர்கொல்லப்பட்டார். மற்றொருவர் ஆபத்தானநிலையில் ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டார்.

இங்கு நடைபெற்ற தாக்குதலின்போது மாளிகாவத்தைப் பகுதியில் உள்ள பல கடைகள் சேதமடைந்தன. இச்சம்பவம் தொடர்பாக நான்கு பேர் கைதுசெய்யப்பட்டனர். 10 பேரைப் பொலிசார் தேடுகின்றனர்.

தகவல் கிடைத்ததும் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஸ்தலத்துக்கு விரைந்துசென்று அமைதியை நிலைநாட்டினார். நேற்று பிற்பகல் சிலமணி நேரம் மாளிகாவத்தைப்பகுதி போர்க்கோலமாகக்காட்சியளித்தது. இரு இன மக்கள் மத்தியில் இத்தாக்குதல் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. 4 உதவிப்பொலிஸ் சுப்பிரிண்டன்டுகள் தலைமையில் விசாரணைக்குழு இதுசம்பந்தமான விசாரணையைநடத்தும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுஇப்படியிருக்க நேற்று முன்தினம் இதேபகுதியில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை டயர் கூட்டுத்தாபன ஊழியர்கள் கொம்பனித்தெருவிலுள்ள விஞ்ஞான கைத்தொழில் அமைச்சை நோக்கி சென்றுகொண்டிருந்தபோது மாளிகாவத்தையில் வைத்து பொலிசார் வேலைநிறுத்தக்காரர்மீது குண்டாந்தடிப்பிரயோகம் செய்ததில் 23 பேர் காயமடைந்த சம்பவம் தொடர்பாகவும் விசாரணை நடக்கிறது. (ம-ஆ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O Box 49, Jaffna; Telegrams Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in SriLanka.